# அண்ணா வழி திராவிடம்

வாழ்வியலுக்கான அரசியல்

மாதம் இருமுறை

பாதை: 1 பயணம்: 2

பட்டியலின சமூக மக்களின் மேம்பாட்டில் புரட்சித்தலைவி

பக்கம் 43

தோல்வியடைந்த ஸ்டாலினின் போலி திராவிட மாடல்

பக்கம் 40

எடப்பாடியார் ஆட்சியில் ஏற்றம் பெற்ற மருத்துவக் கட்டமைப்பு

பக்கம் 15



# தொண்டனுக்கு தோள் கொடுக்கும் அதிமுக

வெளியீடு: அஇஅதிமுக தலைமைக் கழகம்

# அண்ணா வழி
## திராவிடம்

Website

**மின் இதழ்**

www.annavazhidravidam.com






**முதலமைச்சருக்கு உள்ளம்**
**இருக்குமென்று நினைத்தேன்;**
**ஆனால், உள்ளம்**
**இருக்கவேண்டிய இடத்தில்**
**அவருக்கொரு**
**பள்ளம் இருக்கிறது**

– பேரறிஞர் அண்ணா



# கோவிட்-19 சவால்களைச் சந்தித்து மக்களை காத்த அம்மாவின் அரசு

நான் முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையின் மிகவும் சவாலான காலத்தைப் பற்றி நினைத்துப் பார்க்கிறேன். அதுதான் கோவிட்-19 பெருந்தொற்று. இந்த நோய் பரவ ஆரம்பித்தபோது, நாம் கொரோனாவுடன் மட்டும் போராடவில்லை, மாறாக நாம் ஒவ்வொருவரும் நமது தமிழ்நாட்டு மக்களின் உயிருக்காக போராடுகிறோம் என்பதை நான் உணர்ந்தேன். நாம் பயத்துடன் அல்லாமல், தமிழ்நாட்டைப் பல தசாப்தங்களாக வழிநடத்தி வந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித் தலைவி அம்மா ஆகியோர் நமக்கு அளித்த உறுதியான நம்பிக்கையுடன் இந்த நெருக்கடியை அணுகினோம்.

நாம் நமது மக்களை, நோயிலிருந்து மட்டும் அல்லாமல், அதன் பொருளாதார மற்றும் சமூக விளைவுகளிலிருந்தும் காக்க உறுதியுடன் இருந்தோம். சுகாதார வசதிகளை அணுகுவதில் பாகுபாட்டையோ அல்லது ஏற்றத்தாழ்வையோ ஏற்படுத்தக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தோம். எங்கள் அணுகுமுறை திராவிடக் கொள்கைகளில் ஆழமாக வேரூன்றியிருந்தது. சமூக நீதி மற்றும் சமத்துவத்தைப் பின்பற்றும் அஇஅதிமுக., அனைத்து மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு மிகச் சிறப்பாக மருத்துவ சிகிச்சையை வழங்கியது.

அம்மாவின் அரசு இந்த பெருந்தொற்றை ஒரு மருத்துவப் பிரச்சனையாக மட்டும் பார்க்கவில்லை. மாறாக, ஏழை மக்களின் வாழ்வாதாரமும், எதிர்காலமும் பெரிதளவில் பாதிக்கப்படப் போவதை உணர்ந்து, நிவாரண நிதி உதவி வழங்குவது முதல் அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவது வரை, திராவிடக் கொள்கையை அடித்தளமாக வைத்து இயங்கும் அஇஅதிமுக அரசின் மூலம் மக்கள் பயனடைவதை உறுதிச் செய்தோம். மேலும், சமூகத்தில் விளிம்பு நிலையில் இருக்கும் மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் மற்றும் ஆதரவற்றவர்கள் போன்ற பலதரப்பட்ட மக்களையும் கண்ணை இமைக் காப்பது போல் பாதுகாத்தது அஇஅதிமுக அரசு.



## சுகாதாரம் மற்றும் மருத்துவ வளங்கள்:

இந்த நோய் தாக்கியபோது, நமது சுகாதார அமைப்பு ஒரு பெரும் சவாலை எதிர்கொண்டது. மற்ற மாநிலங்கள் எவ்வாறு சிரமப்பட்டன என்பதை நாம் கண்டோம், உதாரணமாக, சத்தீஸ்கரில் மருத்துவமனையில் சேர்ப்பதில் ஏற்பட்ட தாமதங்கள் அதிக இறப்பு விகிதத்திற்கு வழிவகுத்தது. அதை இங்கு நடக்க அனுமதிக்க முடியாது. நமக்கு ஒரு முன்கூட்டிய, விரைவான நடவடிக்கை தேவைப்பட்டது, அதைத்தான் நாம் "பூஜ்ஜியத் தாமதம்" (Zero Delay) என்றளவில் உறுதிச் செய்தோம்.

ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு நான் சென்றது எனக்கு நினைவிருக்கிறது. முன் களத்தில் இருந்த நமது மருத்துவர்களும் செவிலியர்களும் "பூஜ்ஜியத் தாமதம்" வார்டை உருவாக்கினர், இது மருத்துவமனைக்குள் வரும் இடத்திலேயே முக்கியமான சிகிச்சைகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டது. "வாக்கிங் ஹைப்போக்ஸியா" (walking hypoxia) என நாம் அழைக்கும் தீவிர அறிகுறிகளுடன் வந்த நோயாளிகள் காத்திருக்க வேண்டியதில்லை. அவர்கள் உடனடியாகப் பரிசோதிக்கப்பட்டு, நுழைவாயிலிலேயே அவசர சிகிச்சை அளிக்கப்பட்டனர்.

இது, தயக்கமின்றி சிகிச்சை அளிப்பதில் நாம் கொண்டிருந்த அர்ப்பணிப்பைக் காட்டியது. ஒவ்வொரு நிமிடமும் முக்கியம் என்பதை உறுதிப்படுத்தியது. நமது முயற்சியின் முடிவுகள் தெளிவாக இருந்தது. ஜூலை - டிசம்பர் 2020-க்கு இடையில், 4,500-க்கும் மேற்பட்ட நோயாளிகள் ZERO DELAY வார்டில் அனுமதிக்கப்பட்டனர். மூச்சுத் திணறலுடன் வந்தவர்களில் சுமார் 99.1% பேர் உடனடியாக ஆக்ஸிஜன் சிகிச்சை பெற்ற பிறகு குணமடைந்தனர்.

இந்த வெற்றி நமது வலுவான கட்டமைப்பு மற்றும் நமது பொது சுகாதார மரபுக்கு ஒரு சான்றாகும். தமிழ்நாட்டின் தனித்துவமான அம்சம், மருத்துவ மற்றும் பொது சுகாதார சேவைகளை ஒன்றுடன் ஒன்று இணைக்க வேண்டாம் என்ற முடிவுதான். இந்தத் தனிப்பிரிவு, மாவட்ட அளவில் ஒரு வலுவான பொது சுகாதார மேலாண்மைக் குழுவை உருவாக்க வழிவகுத்தது, இது "பொது சுகாதார முறையில் முன்னேடுப்புகளை செய்வதை" உறுதி செய்தது. இந்த நெருக்கடி நமது பன்முகத் துறை அணுகுமுறையின் வலிமையையும் காட்டியது, நமது பொறுப்பு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை போன்ற துறைகளுக்கும் நீட்டிக்கப்பட்டது, இது ஒரு விரிவான நடவடிக்கையை உறுதி செய்தது.

நமது தயார்நிலை ஒரு திடமான அடித்தளத்தின் மீது கட்டப்பட்டது. உலக சுகாதார அமைப்பின் விதிமுறையை விட (1:1000) அதிகமாக, 1:495 என்ற மருத்துவர்-நோயாளி விகிதத்துடன், தமிழ்நாடு ஏற்கனவே நாட்டில் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான மருத்துவர்களைக் கொண்டிருந்தது. பெருந்தொற்றின் ஆபத்தைக் கையாள, நாம் பொது இடங்களை சிகிச்சை மையங்களாக மாற்றினோம், ஜூன் 2020-க்குள் மாநிலம் முழுவதும் படுக்கைகளின் எண்ணிக்கையை 29,074-ல் இருந்து 75,000 ஆக அதிகரித்தோம். மேலும், 2,571 வென்டிலேட்டர்கள் மற்றும் 500 புதிய ஆம்புலன்ஸ்களையும் ஏற்படுத்தி

தடுப்பு நடவடிக்கைகளை முடுக்கி விட்டோம்.

ஆக்ஸிஜன் விநியோகத்தை உறுதி செய்ய, குழாய்களுக்கான நிதியை ஒதுக்கினோம், மேலும் வால்பாறை, கொடைக்கானல் மற்றும் உதகமண்டலத்தில் ஆலைகளை நிறுவி உள்கட்டமைப்பை வலுப்படுத்தினோம். மேலும் 2,100 மருத்துவ அலுவலர்கள் மற்றும் 1,323 செவிலியர்களை விரைவாக நியமித்தோம். நமது சோதனை விகிதம் மிக அதிகமாக இருந்தது, ஒரு நாளைக்கு 90,000 ஆர்.டி.-பி.சி.ஆர். சோதனைகள் நடத்தப்பட்டன. நுண் மேலாண்மை மற்றும் தீவிர சோதனை, அத்துடன் 15 லட்சம் மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்தது ஆகியவற்றை உள்ளடக்கிய "மதுரை மாதிரி", நமது முன்கூட்டிய வியூகத்தை மேலும் எடுத்துக்காட்டியது.

## மக்களின் நலன்

மருத்துவ நடவடிக்கைகளுக்கு அப்பால், நமது அரசு ஒரு விரிவான சமூக நலத் தொகுப்பைச் செயல்படுத்தியது, இது பொது நலனில் நாம் நீண்டகாலமாக கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை பிரதிபலித்தது. திராவிடக் கொள்கையின் முக்கிய அம்சம், மக்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் ஆதரவளிப்பதே. அவ்வாறு செய்வதற்கு அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் இருப்பதை உறுதிசெய்தோம்.

அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ₹1,000 ரொக்கமும், அரிசி, பருப்பு மற்றும் சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கினோம், இந்த முயற்சிக்கு ₹2,187 கோடி செலவானது.

பெருந்தொற்றின் போது நாங்கள் எடுத்த மற்றொரு முக்கியமான முடிவு, மக்கள் யாரும் உணவுக்காக கஷ்டப்படக்கூடாது என நாங்கள் உறுதியேற்றோம், அம்மா உணவகங்கள் மூலம், ஏழு லட்சம் மக்களுக்கு உணவு அளித்தோம். மேலும் இரண்டு லட்சம் மக்களுக்கு சமூக சமையல் கூடத்தில் உணவு வழங்கப்பட்டன. சென்னை மாநகராட்சியில் 407 அம்மா உணவகங்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டு மக்கள் பசியை ஆற்றின, இதன் மூலம் 1.36 கோடிக்கும் அதிகமான மக்கள் பயனடைந்தனர். மேலும் வேலை இழந்தோர் மற்றும் தினக்கூலித் தொழிலாளர்கள் குறிப்பாக வட இந்தியர்கள் பெரிதும் பயனடைந்தனர்.

## பொருளாதார மீள்திறன்

நாம் பெருந்தொற்றுடன் போராடிக் கொண்டிருந்தபோது, நமது பொருளாதாரம் சரிந்துவிடாமல் இருப்பதையும் நாம் உறுதி செய்ய வேண்டிய அவசியம் இருந்தது. மற்ற மாநிலங்கள் மற்றும் தேசத்தின் பொருளாதாரம் வளர்ச்சியே இல்லாமல் சுருங்கிக் கொண்டிருந்தபோது, நாம் 2021 நிதி ஆண்டில் 0.1% வளர்ச்சி விகிதத்தை அடைய முடிந்தது. இது தற்செயல் நிகழ்வு அல்ல. இது ஓர் அம்மா அரசால் திட்டமிடல் மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் அமைக்கப்பட்ட வலுவான அடித்தளத்தின் விளைவு.

முதலமைச்சர் ஸ்டாலின், தி.மு.க. அரசாங்கத்தால் இரட்டை இலக்கு வளர்ச்சி எட்டப்பட்டது என்று கூறுகிறார். அந்த வளர்ச்சியின் அடிப்படை எங்கிருந்து வந்தது என்பதை அவர்கள், நமது ஆட்சியில் அடித்தளம் அமைக்கப்பட்டது என்பதை திட்டமிட்டு மறைத்தார்கள். 2019 உலக முதலீட்டாளர் சந்திப்பு (GIM) 146 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட வழிவகுத்தது. இதன் மதிப்பு ₹3.4 லட்சம் கோடி. இது 10.5 லட்சம் வேலைகளை உருவாக்கும் என்று கணக்கிடப்பட்டது.

கோவிட்-19-ன் சவால்கள் இருந்தபோதிலும், நமது தொலைநோக்கு பார்வையை கைவிடவில்லை.

2021-ல் ஒரு முதலீட்டாளர் நிகழ்வை நடத்தினோம், அது 18 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட வழிவகுத்தது, அதன் மதிப்பு ₹19,955 கோடி. இது 26,000-க்கும் மேற்பட்ட வேலைகளை உருவாக்கியது. நாம் நமது மக்களைக் காத்து, அதே நேரத்தில் நமது பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என்பதை நிரூபித்தோம்.

திராவிடக் கொள்கையின் சமூக நீதி, பொது நலன் மற்றும் அனைவருக்கும் பொருளாதார முன்னேற்றம் ஆகிய கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலம், எந்தவொரு நெருக்கடியையும், எவ்வளவு பெரியதாக இருந்தாலும், நாம் கடக்க முடியும் என்பதை நிரூபித்தோம். நாம் வெறும் பெருந்தொற்றிலிருந்து மட்டும் காப்பாற்றப்படவில்லை. மாறாக, நாம் நிமிர்ந்து நின்றோம், நமது அண்ணா திராவிடக் கொள்கைகளின் உண்மையான வலிமையை உலகுக்குக் காட்டினோம்.

2021 சட்டமன்றத் தேர்தல்களை நடத்துவதில் தேர்தல் ஆணையமும் மற்ற அமைப்புகளும் பெரும் சவாலை எதிர்கொண்டது தெளிவாகத் தெரிந்தது. நாம் அந்தத் தேர்தலை பாதுகாப்பாகவும், எந்த பிரச்சனையும் இல்லாமலும் நடத்தி முடிப்பதை உறுதி செய்துக் கொடுத்தோம். திமுகவின் பொய் வாக்குறுதிகளால் நாம் 2021 சட்டமன்றத் தேர்தலில் தோற்றிருக்கலாம். ஆனால் கோவிட் பெருந்தொற்று பாதிப்பிலிருந்து நம் மக்களை அம்மா வழிநின்று பாதுகாத்து தமிழர்களின் மனதை வென்றுவிட்டோம்.







மயூரா அகிலன்

# எதிரிகளின் சிம்ம சொப்பனம்..


## அதிரடி சரவெடி நிகழ்த்தும் புரட்சித்தமிழர்

எதிரிகளின் முகாமில் இருப்பவர்கள் அதிமுகவைப் பற்றியும் கூட்டணியைப் பற்றியும் என்ன விமர்சனம் வைத்தாலும் அதற்கு உடனடியாக பதிலடி கொடுப்பதில் சிம்ம சொப்பனமாக திகழ்கிறார் கழகப் பொதுச்செயலாளரும் எதிர்கட்சித்தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள். மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம் எழுச்சிப்பயணம் மேற்கொண்டுள்ள புரட்சித்தமிழர் எடப்பாடியார் அவர்கள் செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் உற்சாக வரவேற்பு அளித்து வருகின்றனர்.

கூடியிருக்கும் மக்கள் கூட்டத்தினரிடையே பேசும்போது அதிமுக ஆட்சி காலத்தில் செய்யப்பட்ட நல்ல திட்டங்களை பட்டியலிடும் புரட்சித்தமிழர் எடப்பாடியார் அவர்கள், திமுக கொடுத்த போலி வாக்குறுதிகளை மக்களுக்கு நினைவூட்டுகிறார். அது மட்டுமல்லாது எதிர் அணியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு பாயிண்ட் பாயிண்டாக பதிலடி தந்து கொண்டிருக்கிறார் புரட்சித்தமிழர் எடப்பாடியார்.

அதிமுக - பாஜக கூட்டணியைப்பற்றி திமுகவும் கூட்டணி கட்சியினரும் விமர்சிப்பதால், அதற்கும் சரியான பதிலடி கொடுத்து வருகிறார். 5ஆம் கட்ட எழுச்சிப்பயணம் மேற்கொண்டுள்ள எடப்பாடி பழனிசாமி அவர்கள், நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம், குன்னூர், கூடலூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் பேசும் போது, குளிரையும் தாண்டி அவரது பேச்சில் அனல் பறந்தது.

திமுக கருணாநிதி அணி, வைகோ அணி என்று பிளவுபட்டபோது அண்ணா அறிவாலயத்தை காப்பாற்றியவர் புரட்சித்தலைவி அம்மாதான் என்று அதிரடியாக பேசிய எடப்பாடி பழனிசாமி அவர்கள், குடும்ப அரசியல், வாரிசு அரசியல் மூலம் கொள்ளையடிக்கிறார்கள் என்று குற்றம் சாட்டினார். கூட்டணியில் இருப்பவர்களை திமுக அடிமையாக நடத்துவதாக கூறிய எடப்பாடியார், அதிமுக சுயமரியாதையுடன் நடத்துவதையும் குறிப்பிட்டு பேசினார்.



திமுக கூட்டணியில் உள்ள தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகையை கடுமையாக விமர்சித்த எடப்பாடியார், 'பிச்சைக்காரன் ஓட்டையை மறைக்க ஒட்டுப்போட்ட சட்டை போடுவது போல' செல்வப்பெருந்தகை, பல கட்சிகளுக்கு சென்று வந்தவர் என்று கூறினார். காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் கூடுதல் தொகுதியும், கூட்டணியில் பங்கும் கேட்டு போர்கொடி உயர்த்தினாலும் அதனை செல்வப்பெருந்தகை மறுக்கிறார் என்றும் கிண்டலடித்தார் புரட்சித்தமிழர் எடப்பாடியார்.

இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே திமுக அரசுதான் ரோல் மாடல் அரசு என்று ஸ்டாலின் பேசியுள்ளதற்கு பதிலடி கொடுத்த எடப்பாடி பழனிசாமி அவர்கள், குடும்ப அரசியல், வாரிசு அரசியலில் திமுக அரசுதான் ரோல் மாடல் அரசு என்று தெரிவித்தார். ஊழல் செய்வதிலும், கமிஷன், கலெக்சன், கரப்சனிலும்தான் திமுக அரசு ரோல் மாடல் அரசாக இருப்பதாக அவர் கூறினார்.

**தமிழ்நாடு முழுவதும் 170 தொகுதிகளுக்கு மேல் மக்களை சந்தித்து பேசியுள்ள எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு கிடைக்கும் வரவேற்பினை பார்க்கும் போது, ஆட்சிக்கட்டிலில் அதிமுக அமர்வது உறுதியாகியுள்ளது என்றே கூறலாம்.**



### சொன்னதை செய்யாத திமுக.. 2026ல் தமிழக மக்கள் விரட்டி அடிப்பது நிச்சயம்:


நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இதை செய்வோம், அதை செய்வோம் எதை எதையோ செய்வோம் என்று பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து 2021ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின் போது தமிழ்நாட்டு மக்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்து ஆட்சியில் அமர்ந்தது திமுக. நான்கரை ஆண்டு கால திமுகவின் ஆட்சியில் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஏமாற்றி விட்டதாகவே பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

### சொன்னதை செய்யாத திமுக:

திமுக தேர்தல் அறிக்கையில் 505 வாக்குறுதிகளை அளிக்கப்பட்டிருந்தன. இவற்றில் 95 சதவிகித வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டதாக ஸ்டாலின் சொன்னாலும் 13 சதவிகித வாக்குறுதிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டிருப்பதாக சொல்கிறது புள்ளி விபரம். மொத்தமுள்ள 505 வாக்குறுதிகளில் 66 வாக்குறுதிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும், 66 வாக்குறுதிகள் அரைகுறையாக நிறைவேற்றப்பட்டப் பட்டிருப்பதாகவும், 373 வாக்குறுதிகளை திமுக நிறைவேற்றவே இல்லை என்பதுதான் உண்மை.

### திமுக நிறைவேற்றாத முக்கிய வாக்குறுதிகள்:

ஈழத் தமிழர் நலன் தொடர்பாக திமுக சார்பில் 4 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றுகூட நிறைவேற்றப்படவில்லை. லோக் ஆயுக்தா அமைப்பு வலுப்படுத்தப்பட்டு அமைச்சர்கள் உள்ளிட்டோர் மீதான குற்றங்கள் விரைந்து விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படும். சேவை உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு செயல்படுத்தப்படும். என இது போன்ற எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. மாநில சுயாட்சி, கல்வி வளர்ச்சி ஆகியவை சார்ந்து மொத்தம் 12 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன. அதில் ஒரே ஒரு வாக்குறுதி மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளது. 8 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. 3 வாக்குறுதிகள் அரைகுறையாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.



### நிர்வாக சீர்திருத்தம் சேவை உரிமைச் சட்டம் இல்லை:

நிர்வாக சீர்திருத்தம் தொடர்பாக மொத்தம் 9 வாக்குறுதிகள் அளிக்கபட்டிருந்தன. அவற்றில் 8 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. ஒரே ஒரு வாக்குறுதி மட்டுமே அரைகுறையாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

### மாணவர்களுக்கு ஏமாற்றம்:

மாணவர்களின் கல்விக் கடன் ரத்து செய்யப்படும். மருத்துவ மாணவர் சேர்க்கையில் அகில இந்திய ஒதுக்கீடு ரத்து செய்யப்படும். நீட் தேர்வு ரத்து செய்யப்படும். முதல் தலைமுறை பட்டதாரிக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை ஆகிய வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

### உழவர்கள் ஏமாற்றம்:

உழவர்கள் நலன் மற்றும் வேளாண்மை தொடர்பாக மொத்தம் 56 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 8 வாக்குறுதிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளன. 7 வாக்குறுதிகள் அரைகுறையாக மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளன. 41 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

விவசாயிகளின் ஒப்புதல் இல்லாமல் விளை நிலங்கள் வேறு பயன்பாட்டுக்கு மாற்றப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். நியாயவிலைக் கடைகளில் நாட்டுச் சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

### மீனவர்களுக்கு நிறைவேறாத வாக்குறுதிகள்:

மீனவர்களின் நலன்கள், மீனவர்களின் பாதுகாப்பு தொடர்பாக 25 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு இருந்தன. அவற்றில் ஒரே ஒரு வாக்குறுதிகூட முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. 5 வாக்குறுதிகள் அரைகுறையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. மீனவர்கள் நலனைக் காக்க கச்சத்தீவை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மீனவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்து அதற்கான சலுகைகளைப் பெற்றுத்தர திமுக அரசு நடவடிக்கை எடுக்கும். மீனவர்களுக்கு 2 இலட்சம் புதிய வீடுகள் கட்டித்தரப்படும் உள்ளிட்ட 20 வாக்குறுதிகள் நிறைவேற்றவில்லை.

### நெசவாளர்கள் நலனில் அக்கறை இல்லாத அரசு:

நெசவாளர்கள் தொடர்பாக அளிக்கப்பட்ட 14 வாக்குறுதிகளில் நெசவாளர்களுக்கென்று தனியாகக் கூட்டுறவு வங்கி அமைக்கப்படும். ஜவுளித்துறையை மேம்படுத்துவதற்குத் தனியாக ஜவுளி ஆணையம் அமைக்கப்படும் என்ற வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

## பெண்கள் நலனில் அக்கறை இல்லாத அரசு:

திமுக ஆட்சி அமைந்த பிறகு பள்ளிக்கு செல்லும் சிறுமிகள் முதல் வயதான பாட்டிகள் வரைக்கும் பாதுகாப்பு இல்லாத நிலையிலேயே இருக்கின்றனர். பெண்கள் பாதுகாப்பு, பெண்கள் முன்னேற்றம் தொடர்பாக அளித்த வாக்குறுதிகளில் 22 வாக்குறுதிகளை திமுக நிறைவேற்றவில்லை.

35 வயதுக்கு மேற்பட்ட, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் கைம்பெண்களுக்கு கல்வித் தகுதியின் அடிப்படையில் அரசு மற்றும் அரசு நிறுவனங்களில் வேலை வழங்கப்படும். 5 வகையான திருமண நிதி உதவித் திட்டத்தில் வழங்கப்படும் உதவித் தொகை ரூ.30 ஆயிரமாக உயர்த்தப்படுவதுடன், 8 கிராம் தங்கமும் வழங்கப்படும். சமையல் எரிவாயு உருளைகளுக்கு, ஒரு மாதத்திற்கு ஓர் உருளை என்ற அளவில், ரூ.100 வீதம் மானியம் வழங்கப்படும் போன்ற வாக்குறுதிகளையும் திமுக நிறைவேற்றவில்லை.

பொய்யான வாக்குறுதிகளை அளித்து நிறைவேற்றாத திமுக அரசு மீண்டும் மக்களை சந்திக்க தயாராகி வருகிறது. இனியும் மக்கள் ஏமாற தயாராக இல்லை என்பதே உண்மை.



# கரூர் உயிரிழப்பு:
## திமுக அரசின் அலட்சியத்தின் உச்சகட்டம்!

கரூர் துயரம் பொறுப்பேற்காத திமுகவின் திட்டமின்மையால் கரூர் மண்ணில் நிகழ்ந்த மாபெரும் துயரச்சம்பவத்தில் 41 அப்பாவி மக்கள் உயிரிழந்துள்ளனர். இவர்கள் யாருக்கும் அரசியல் அடையாளம் இல்லை. சாதி, மத வேறுபாடு இல்லை. சாதாரண வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் அரசியல் விழாவைப் பார்க்கச் சென்றதற்காக இந்த விடியா ஆட்சியின் நிர்வாகமின்மையால் உயிரை இழந்துள்ளனர்.

இதற்குக் காரணம் யார்? திமுக அரசு, அதன் காவல்துறை, அதனுடன் இணைந்த த.வெ.க-வின் திட்டமிடப்படாத ஏற்பாடுகளே.

### அலட்சியத்தின் உச்சகட்டம் திமுக அரசு:

தமிழக அரசுக்கு மக்களின் பாதுகாப்பு குறைந்தபட்ச கடமையாக இருந்திருக்க வேண்டும். ஆனால், இந்த துயரத்திற்குப் பிறகு நாம் பார்த்த காட்சி அரசின் பொறுப்பின்மையின் சான்று. சம்பவத்துக்கு முன்பே கூட்டம் பெருகுவதை காவல்துறையினர் கண்டும் காணாமல் அலட்சியப் போக்கோடு இருந்துள்ளனர். போதிய தடுப்புகள், போதுமான காவல்துறையினர் போன்ற எந்த அடிப்படை வசதிகளும் செய்யப்படவில்லை.அதிலும் கரூர் மாவட்ட திமுக செயலாளர், முன்னாள் அமைச்சர், செந்தில் பாலாஜியின் மறைமுக சதிச் செயலே இந்த விபத்துக்கு வழிவகுத்தது என்ற வதந்தியும் மக்களிடையே வலுவாக இருக்கிறது. இதை அரசு உரிய வகையில் விசாரிக்காமல், மறைக்க முயற்சிக்கிறது என்ற குற்றச்சாட்டும் நிலவுகிறது.

### நீதிபதி கமிஷன் கண்மூடித் தந்திரம்:

ஒரு நபர் ஆணையம் அமைத்து, ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் விசாரணை நடக்கிறது என்று அரசு அறிவித்துள்ளது. ஆனால் இது வெறும் கண்மூடித் தந்திரம் என்று மக்கள் நினைக்கின்றனர். இதுவரை நடந்த எந்த சம்பவங்களிலும் இப்படிப்பட்ட ஆணையங்கள் உண்மையை வெளிக்கொணராமல் காலத்தை வீணாக்குவதற்கே பயன்படுத்தப்பட்டன என்று எண்ணுகின்றனர்.

அதே சமயம், மாநிலத்தின் உயர் பதவியில் உள்ள அதிகாரிகள் ஒருவருக்குப் பிறகு ஒருவராக பத்திரிகையாளர் சந்திப்பில் திமுகவின் தவறுகளை மறைத்து விளக்கங்கள் தருவது நிர்வாகத்தை அரசியல் கட்சியின் கைப்பாவையாக மாற்றியுள்ளதற்குச் சான்று.



### செந்தில்பாலாஜியின் வீடியோ அரசியல்:

திமுக முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி தன்னைத்தானே முன்னிறுத்தி, வீடியோக்களை வெளியிட்டு விளக்கம் அளிப்பது முற்றிலும் தேவையற்ற செயல். சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம், நீதி விசாரணை வேண்டும் என்பதற்குப் பதிலாக அரசியல் விளம்பரம் செய்வதே இவர்களின் நோக்கம்.

## தவெகவின் அனுபவமின்மை:

இந்தச் சம்பவத்தில் தவெகவின் பங்கு மறுக்க முடியாதது.

பொதுமக்கள் கூடுவதை முன்னறிந்து கூடுதல் ஏற்பாடுகளைச் செய்யவில்லை.

தண்ணீர், மருத்துவ வசதி போன்ற மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு எந்த ஏற்பாடும் தவெக செய்யவில்லை.

மிக முக்கியமாக தமிழக வெற்றிக் கழகத்தின் கட்சித் தலைவர் 7 மணி நேரம் தாமதமாக வந்தது கூட்டத்தில் ஏற்கெனவே ஏற்பட்ட மன அழுத்தத்தைப் பெரிதாக்கியது.

இந்த அனுபவமின்மையும், அரசின் அலட்சியமும் இணைந்து இந்த அரசியல் நிகழ்வை பேரழிவாக மாற்றி 41 அப்பாவி உயிர்களை பலி கொண்டது.

## உண்மையைச் சொல்லும் அதிமுக:

இன்று அதிமுக மக்களின் குரலை வெளிப்படுத்துகிறது.

இந்த அரசின் அலட்சியத்தால் உயிரிழந்தவர்களுக்கு உரிய நீதி கிடைக்குமா? என்ற கேள்வி எழுப்புகிறது. பொறுப்பேற்காமல், தவறுகளை மறைத்து, அதிகாரிகளை முன்னிறுத்தி, அரசு அதிகாரிகளை விளக்கம் அளிக்கச் செய்வது ஜனநாயகத்திற்கான அவமதிப்பு, மக்களை கிள்ளு கீரையாக எண்ணும் மனநிலை.

கரூர் மட்டும் அல்ல, ஏற்கெனவே மெரினா கடற்கரை நெரிசல் மரணங்கள் விஷச்சாராயச் சாவுகள் போன்றவற்றிலும் அலட்சியம் இருந்தது. அந்த அனுபவங்களிலிருந்து அரசு எந்தப் பாடமும் கற்றுக் கொள்ள முயற்சிக்காமல் பொம்மை முதல்வரின் பொம்மை ஆட்சியாக இந்த அவல ஆட்சி தொடர்கிறது.

கரூர் துயர சம்பவம் திமுக அரசின் கையாளாகாதத்தனத்தையும், தவெகவின் அனுபவமின்மையையும் வெளிப்படுத்தியுள்ளது. அரசு அதிகாரிகளின் பத்திரிகைச் சந்திப்புகள் வீடியோ விளக்கங்கள், கமிஷன் விசாரணைகள் எதுவும் இழந்த 41 உயிர்களை திரும்ப தரப்போவதில்லை



**அதிமுக வலியுறுத்துவது ஒன்று மட்டுமே**

- உண்மையான குற்றவாளிகள் வெளிச்சத்துக்கு வர வேண்டும்.
- பொறுப்பேற்க வேண்டியவர்கள் பொறுப்பேற்க வேண்டும்
- உயிரிழந்த குடும்பங்களுக்கு நியாயமான நிவாரணம் கிடைக்க வேண்டும். குற்றம் இழைத்தவர்களுக்கு கடுமையான தண்டனை கிடைக்க வேண்டும்.



## நஞ்சாக மாறிய இருமல் மருந்து.. 22 இளம் பிஞ்சுகளின் மரணத்திற்கு தமிழக அரசு பொறுப்பு ஏற்குமா?

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தயாரிக்கப்பட்ட கோல்ட்ரிப் இருமல் மருந்து மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களைச் சேர்ந்த 22 இளம் உயிர்களைக் குடித்துள்ளது. இந்த இளம் பிஞ்சுகளின் உயிர்கள் பறிபோக காரணமாக இருந்த அந்த ஸ்ரீசன் மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் உரிமையாளரை கைது செய்ததோடு, அந்த மருந்து நிறுவனத்தை மூடி சீல் வைத்திருக்கிறது தமிழ்நாடு அரசு.

இத்தனை ஆண்டுகாலமாக செயல்பட்டு வந்த இந்த இருமல் மருந்து நிறுவனம், நஞ்சான மருந்தை விற்பனை செய்ததற்கு யார் காரணம்? யாருடைய அலட்சியத்தால் 22 இளம் பிஞ்சுகளின் உயிர்கள் பலியாயின என்ற கேள்வி இப்போது எழுகிறது. கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்பது போல பல உயிர்கள் பலியான பின்னர், தமிழ்நாடு அரசுக்கு கண்டனங்கள் குவிந்த பின்னரே அவசரம் அவசரமாக சுகாதாரத்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மத்தியப் பிரதேச சிறப்பு புலனாய்வுக் குழுவினர் மற்றும் உயிரிழப்பு ஏற்பட்ட மாநிலங்களின் மருந்து கட்டுப்பாட்டு அதிகாரிகள் சுங்குவார்சத்திரத்தில் உள்ள ஸ்ரீசன் ஃபார்மா மருந்து உற்பத்தி ஆலைக்கு வந்து திடீர் ஆய்வு செய்தது.

மருந்து தயாரிப்புக்குப்பயன்படுத்தப்பட்ட மூலப் பொருள்கள், தயாரிக்கப்பட்ட மருந்தின் மாதிரிகளை ஆய்வுக்காக எடுத்துச்சென்று பரிசோதனை செய்தது.




ஆய்வில் கோல்ட்ரிப் இருமல் மருந்தில் டை எத்திலீன் கிளைகால் என்ற வேதியியல் பொருள் ஏடாகூடமாக. அளவுக்கு அதிகமாக கலந்திருப்பது தெரிய வந்திருக்கிறது.

டை எத்திலீன் கிளைகால் என்பது பெட்ரோலில் இருந்து கிடைக்கும் ஒருவித வேதிப்பொருள். தொழிற்சாலைகளில் பெயிண்ட் உற்பத்திக்கு இந்த வேதிப் பொருளைப் பயன்படுத்துவார்கள்.

இருமல் மருந்தில் இந்த டை எத்திலீன் கிளைகால் அனுமதிக்கப்பட்ட அளவு 0.1 சதவிகிதம். ஆனால் அதில் இருக்கும் அளவு 48 சதவிகிதம். இப்படி பெயிண்ட் தயாரிப்புக்கு உதவும் ஒரு ரசாயனப் பொருள் எதற்கு இருமல் மருந்தில் இந்த அளவுக்குச் சேர்க்கப்பட்டது என்பது புரியவில்லை.

டை எத்திலீன் கிளைக்கால்' அதிகரித்து, குழந்தைகளின் சிறுநீரகத்தைப் பாதித்து 22 குழந்தைகளின் உயிரிழப்புக்குக் காரணமாகியுள்ளது.

இந்த சம்பவத்திற்கு அரசியல் கட்சியினர் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், அதிமுகவினர் 5 கேள்விகளை எழுப்பியுள்ளனர். குழந்தைகள் இருமல் மருந்து குடித்து உயிரிழக்க காரணமான ஸ்ரீசன் மருந்து நிறுவனத்தின் உரிமம் திரும்பப் பெறப்படுவதாக திமுக அரசு அறிவித்த பிறகு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

**திமுக அரசுக்கு 5 கேள்விகள்:**

1. 22 குழந்தைகள் இருமல் மருந்து குடித்து உயிரிழக்க காரணமான ஸ்ரீசன் மருந்து நிறுவனத்தின் உரிமம் திரும்பப் பெறப்படுவதாக திமுக அரசு அறிவித்த பிறகு எடுத்த நடவடிக்கைகள் என்ன?
2. மருத்துவத் துறை சார்பில் சுற்றறிக்கை, அல்லது அரசாணை ஏதேனும் வெளியிடப் பட்டதா? ஏற்கெனவே மருந்து கடைகளுக்கு விநியோகம் செய்யப்பட்ட மருந்துகளின் விற்பனைக்குத் தடை விதித்து அறிவிப்பு எதுவும் வெளியிட்டீர்களா?
3. தமிழகம் முழுவதும் உள்ள மருந்து கடைகளில் இருந்து ஸ்ரீசன் நிறுவன மருந்துகள் முழுமையாக அகற்றப்பட்டதை உறுதி செய்ததா திமுக அரசு?
4. முதல்வருக்கு ப்ரோமோஷன் செய்ய அவ்வப்போது விளம்பரம் கொடுக்கிறீர்களே... 22 அப்பாவி குழந்தைகள் உயிரிழக்க காரணமான இந்த நிறுவன மருந்துகளை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்படுவது குறித்து செய்தித் தாள்களில், ஊடகங்களில் ஏதேனும் விளம்பரம் வெளியிட்டீர்களா?

இப்படி திமுக அரசுக்கு எதிராக ஐந்து கேள்விகள் எழுகின்றன.



**22 குழந்தைகளின் உயிரிழப்புக்கு யார் காரணம்? தமிழக சுகாதாரத்துறையினரின் அலட்சியமா? இருமல் மருந்தில் கலப்படம் செய்த ஸ்ரீசன் மருந்து நிறுவனமா? அரசு இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறது?**





# தலையங்கம்:

**அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 54ஆம் ஆண்டு மக்கள் நம்பிக்கையின் பொற்காலப் பயணம்**

உலக அரசியல் வரலாற்றில் மக்களின் இதயத்தில் ஆழமாக வேரூன்றிய இயக்கம் ஒன்று இருந்தால், அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.இ.அ.தி.மு.க) தான்.

இன்று இந்த இயக்கம் தனது 54ஆவது ஆண்டு விழாவை கொண்டாடுகிறது. இது ஓர் அரசியல் கட்சியின் ஆண்டு விழாவாக இல்லாமல், மக்களின் நம்பிக்கை, சமூக நீதி, சமத்துவம், வளர்ச்சி ஆகியவற்றின் விழாவாக மாறியுள்ளது.

1972ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், “அரசியல் மக்களுக்காக இருக்க வேண்டும், சிலருக்காக அல்ல” என்ற நம்பிக்கையில் அ.இ.அ.தி.மு.க-வை தொடங்கினார்.

அந்த நாளிலிருந்து, இன்றுவரை, இந்த இயக்கம் மக்கள் நலனுக்காக வாழ்ந்து, மக்களுக்காகவே செயல்பட்டு வருகிறது.

54 ஆண்டுகளில் 32 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த பெருமை பெற்ற ஒரே இயக்கம் அ.இ.அ.தி.மு.க.தான்.

இது, அ.இ.அ.தி.மு.க மக்களிடத்தில் பெற்றிருக்கும் நம்பிக்கைக்கான சான்று ஆகும்.

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் - மக்களின் இதயத்தில் நிலைத்த பெருந்தலைவர்:**

எம்.ஜி.ஆர் ஆட்சியில், தமிழகத்தின் ஏழை மக்களின் வாழ்க்கை மாற்றம் கண்டது.

சத்துணவுத் திட்டம், பெண்களுக்கு



இலவச கல்வி, விடுதி வசதி, மருத்துவச் சேவைகள் என பல நலத்திட்டங்கள் மக்கள் வாழ்வை உயர்த்தின.

புரட்சித் தலைவர் “மக்கள் சேவையே அரசியல்” என்ற கருத்தை வாழ்வியல் நெறியாக மாற்றினார்.

**புரட்சித் தலைவி அம்மா மக்கள் நல ஆட்சியின் முகம்:**

அம்மா ஆட்சியில், மக்கள் நலத் திட்டங்கள் தமிழ்நாட்டின் அடையாளமாக மாறின.

அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா வீடு, அம்மா மருந்தகம் போன்றவை மக்கள் வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் நம்பிக்கையை விதைத்தன.

அவரது ஆட்சியில் பெண்கள் முன்னேற்றம், கல்வி சமத்துவம், தொழில் வளர்ச்சி, நம்பிக்கை, ஆகியவை வேரூன்றின.

அம்மா ஒரு தலைவர் மட்டுமல்லர், மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்த உன்னதத் தாய்.



# மக்களுக்காக பிறந்தோம் மக்களுக்காக வாழ்கிறோம்.

இது தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடையாளமும், தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கையும்.

**வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்..**

**இப்படை தோற்கின் எப்படை வெல்லும்..**

**அம்மா வழியின் தொடர்ச்சி புரட்சித் தமிழர்:**

புரட்சித்தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் புரட்சித் தலைவர், புரட்சித்தலைவி அம்மாவின் வழியில் வந்த தலைவர்.

அ.இ.அ.தி.மு.க-வின் இன்றைய தலைவர் எடப்பாடியார், தன்னுடைய எளிமை, உழைப்பு மற்றும் மக்கள் வழியில், அண்ணா, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோரின் பாதையில் உறுதியாகச் செல்கிறார்.

அவரது ஆட்சியில் விவசாயம், சாலை மேம்பாடு, குடிநீர், கல்வி, மருத்துவம் போன்ற துறைகள் மக்கள் நலனை மையப்படுத்தி முன்னேற்றம் கண்டன.

நம்பிக்கை கொண்டவன் தோற்க மாட்டான் என்ற உண்மையை அவரே நிரூபித்தார்.

**திராவிட சிந்தனையின் உண்மை வாரிசு - அ.தி.மு.க:**

திராவிட சிந்தனை என்பதே சமூக நீதி, சமத்துவம், கல்வி வாய்ப்பு ஆகியவற்றின் அடித்தளம்.

அந்த அடித்தளத்தைக் காப்பாற்றி, அதை மக்கள் நலன் நோக்கில் நடைமுறைப்படுத்திய ஒரே இயக்கம் அண்ணா திமுக தான்.

இன்றைய திமுக அரசு திராவிடத்தின் பெயரில் குடும்ப ஆட்சியைத் திணிக்கிறது.

அதிலிருந்து தமிழ்நாட்டை மீட்கக்கூடிய ஒரே சக்தி அ.இ.அ.தி.மு.க தான்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 54 ஆண்டுகள் என்பது வெறும் வரலாறு அல்ல - மக்கள் இயக்கத்தின் ஒரு சாதனைப் பயணம்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித் தலைவி அம்மா, மக்களின் தலைவர் புரட்சித்தமிழர் எடப்பாடியார் இவர்கள் மூவரும் மக்களின் நம்பிக்கையை அரசியலின் உயிராக்கினார்கள்.

இன்று, அந்த மரபைத் தொடர்ந்து, அ.இ.அ.தி.மு.க தமிழகத்தில் சமூக நீதி, பொருளாதார வளர்ச்சி, கல்வி சமத்துவம், குடும்ப அரசியலுக்கு எதிரான ஜனநாயகம் ஆகியவற்றை நிலைநாட்டும் வழியில் தன்னம்பிக்கையுடன் முன்னேறுகிறது.

-ஆசிரியர் குழு

மணிமேகலை பாரதி

# எடப்பாடியார் ஆட்சியில் ஏற்றம் பெற்ற மருத்துவக்கட்டமைப்பு!

அதிமுக ஆட்சியில் எப்போதுமே சட்டம் ஒழுங்கு, கல்வி, மகளிர் மேம்பாடு, எளியோர் நலன் ஆகியவை சிறப்பாக இருக்கும். அதிலும் சிறப்பாக மருத்துவக்கட்டமைப்பைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். எடப்பாடியார் ஆட்சியில் மருத்துவத்துறையில் 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சாதனைகள்.

அதிமுக ஆட்சிக்காலத்தில் மொத்தம் 17 புதிய மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. எடப்பாடியார் ஆட்சியில் ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகள் கொண்டுவரப்பட்டு கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கி கட்டடங்கள் கட்டப்பட்டன.



31ஆயிரத்து 316அரசு மருத்துவப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அரசுப் பள்ளியில் படித்த மாணவர்களுக்கு 7.5% உள் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. உடனடி மருத்துவ சிகிச்சைக்கு 2000 அம்மா மினி கிளினிக்குகள் திறக்கப்பட்டன. தாய்மார்களின் கர்ப்பப்பை நீக்கும் அறுவை சிகிச்சைக்கு ரூ.45,000 உதவித்தொகை வழங்கப்பட்டது. உறுப்புமாற்று அறுவை சிகிச்சையில் தேசிய அளவில் முதல் இடம் பெற்று சாதனை. கண்புரை அறுவை சிகிச்சைக்கு ரூ.25,000 உதவித்தொகை வழங்கப்பட்டது.

கொரோனா காலத்தில் அப்போதைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியின் தலைமை நிறைய சாதனைகளைச் செய்தது. 2020-ல் கொரோனா வைரஸ் பரவல் உலகையே அச்சத்தில் ஆழ்த்தியபோது, தமிழகமும் மிகப்பெரிய சவாலைச் சந்தித்தது. இந்த அசாதாரண சூழ்நிலையில், அப்போது முதல்வராக இருந்த புரட்சித் தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி எடுத்த தீர்மானங்களும் நடவடிக்கைகளும் தமிழகத்தை நாட்டின் முன்னோடியாக மாற்றின.

### உடனடி மருத்துவ நடவடிக்கைகள்:

தமிழகத்தில் 200-க்கும் மேற்பட்ட கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்கள் (COVID Care Centres) அமைக்கப்பட்டன. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுடன் இணைந்து, கொரோனா நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மாவட்ட அரசு மருத்துவமனையிலும் அவசர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள், வெண்டிலேட்டர்கள், ஆக்ஸிஜன் உற்பத்தி ஆலைகள் நிறுவப்பட்டன.



### சோதனை, தடுப்பு மற்றும் தடுப்பூசி:

நாடு முழுவதும் அதிக எண்ணிக்கையில் ஆர்டி-பிசிஆர் சோதனைகள் நடத்திய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் வகித்தது. வீட்டுக்கு வீடு சென்று சுகாதாரப் பணியாளர்கள் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பணியை மேற்கொண்டனர். எடப்பாடியாரின் அரசு தடுப்பூசி முகாம்களை விரைவாகத் தொடங்கியது; அரசு மருத்துவமனைகளில் பொதுமக்களுக்கு இலவசமாகத் தடுப்பூசி வழங்கப்பட்டது.

### மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகள்:

ரேஷன் கார்டு வைத்திருந்த அனைவருக்கும் பல மாதங்களுக்கு இலவச அரிசி, தானியங்கள், தேவையான அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டன. “அம்மா உணவகங்கள்” மூலம் பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு இலவசமாக உணவு கிடைக்கச் செய்யப்பட்டது. பள்ளிகள் மூடப்பட்டபோதும், மாணவர்களின் கல்வியை நிறுத்தாமல், கல்வித் தொலைக்காட்சி மூலம் வகுப்புகள் எடுக்கப்பட்டு ஒளிபரப்பப்பட்டன. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஆல் பாஸ் போடப்பட்டது.

### புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள்:

எடப்பாடியார் ஆட்சியில் மட்டும் தமிழகத்தில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் அறிவிக்கப்பட்டு, பல மாவட்டங்களுக்கு நேரடியாக மருத்துவக் கல்வி மற்றும் சிறப்பு சிகிச்சை கிடைக்கும் வகையில் அடித்தளப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

### பொருளாதார நிலைமை மற்றும் தொழிலாளர்கள்:

சிறு, குறு, நடுத்தர தொழில்களுக்கு (MSME) வட்டி இல்லா கடன் திட்டம் அறிவிக்கப்பட்டது. கொரோனா காலத்தில் மருத்துவம், காவல்துறை, தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட முன்னணி போராளிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

### மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகள்:

கொரோனா காலத்தின் கடின சூழ்நிலையில் எடப்பாடியார் அரசு எடுத்த முடிவுகள் தமிழக மக்களின் உயிரைக் காப்பாற்றியது. தமிழகத்தின் கொரோனா மேலாண்மை முறை நாட்டின் பல மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக பாராட்டப்பட்டது. உலக சுகாதார அமைப்பும் (WHO) கூட, தமிழகத்தின் கண்காணிப்பு மற்றும் சோதனை முறைமையைப் பாராட்டியது.

### மருத்துவக் கட்டமைப்பும், 7.5% இடஒதுக்கீடும்:

சிறப்பான ஆட்சியின் அடையாளம் மக்களின் வாழ்வை மாற்றுவதில் இருக்கிறது. அந்த உண்மையை முன்னாள் முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி தனது ஆட்சிக்காலத்தில் இரண்டு முக்கியமான சீர்திருத்தங்களின் மூலம் நிலைநாட்டினார் -மருத்துவ அடித்தள மேம்பாடு மற்றும் 7.5% இடஒதுக்கீடு.

## மருத்துவ அடித்தள மேம்பாடு:

எடப்பாடியார் ஆட்சியில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. இதன் மூலம் மாவட்டங்களுக்கு மருத்துவக் கல்வியும், சிறப்பு சிகிச்சையும் அருகிலேயே கிடைக்க வழிவகை செய்யப்பட்டது. எம்.பி.பி.எஸ் இருக்கைகள் 1,300-க்கும் மேல் அதிகரித்து, தமிழகத்தின் மருத்துவத் துறை தேசிய அளவில் முன்னிலை பெற்றது.

கொரோனா காலத்தில் தமிழகத்தை முன்னோடியாக்கிய முடிவுகளாக, மாவட்ட மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் ஆலைகள், ஐ.சி.யு படுக்கைகள், மருத்துவ உபகரணங்கள் அதிகமாக கொள்முதல் செய்ததைச் சொல்லலாம்.





### மருத்துவ அடித்தளக்கட்டமைப்பின் வலுவான விரிவாக்கம்:

எடப்பாடியார் ஆட்சியின் போது மருத்துவத் துறை தமிழகத்தில் ஒரு புதிய உச்சத்தைக் கண்டது. குறிப்பாக கொரோனா தொற்றுக் காலத்தில், தமிழகத்தை நாடு முழுக்க முன்னோடியாக்கிய முடிவுகள் அவரது தலைமையின் திறமையை வெளிப்படுத்தின.





## மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை வசதிகள்:

மாவட்ட அரசு மருத்துவமனைகள் அனைத்தும் மேம்படுத்தப்பட்டு, மருத்துவ உபகரணங்கள், ஐ.சி.யு படுக்கைகள், ஆக்ஸிஜன் உற்பத்தி ஆலைகள் ஆகியவை நிறுவப்பட்டன. எடப்பாடியார் தலைமையிலான அரசு கொரோனா தொற்றைச் சமாளிக்க, 200-க்கும் மேற்பட்ட சிறப்பு மருத்துவமனைகளை அமைத்தது. தனியார் மருத்துவமனைகளுடன் இணைந்து, அரசு நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை அளிக்க வழி செய்தது. இத்தகைய மருத்துவக் கட்டமைப்பின் வளர்ச்சி எடப்பாடியாரை "**மருத்துவச் சீர்திருத்த முதல்வர்**" என்ற பெயர்கொண்டு அழைக்க காரணமாக அமைந்தது.

## 7.5% இடஒதுக்கீடு-சாதாரண குடும்பங்களின் கனவை நனவாக்கிய சட்டம்:

தமிழகத்தின் சாதாரண விவசாயி, தொழிலாளி, ஏழை குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மருத்துவக் கல்வி எப்போதுமே ஒரு கனவாக இருந்தது. நீட் தேர்வின் அறிமுகம் அந்தக் கனவை நொறுக்கினாலும், அதற்கேற்ற சமூக நீதி வழியை எடப்பாடி பழனிசாமி அரசு அமைத்துக் காட்டியது.

7.5% இடஒதுக்கீடு சட்டம் கொண்டு வரப்பட்டதால், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த மாணவர்கள் நீட் தேர்வில் தகுதி பெற்றால், அரசு மருத்துவக் கல்லூரிகளில் மொத்த இடங்களின் 7.5% சிறப்பு ஒதுக்கீடு பெறும் உரிமை கிடைத்தது.

இந்த சட்டம் 2020-ல் நிறைவேற்றப்பட்டதும், ஆயிரக்கணக்கான அரசுப் பள்ளி மாணவர்கள், தங்களின் பொருளாதார நிலைமையை மீறி, அரசு மருத்துவக் கல்லூரிகளில் இடம் பெற்றனர். எடப்பாடியாரின் இந்த முடிவு, தமிழ்நாட்டில் கல்வி சமத்துவத்திற்கான புரட்சி என்று அரசியல், கல்வி வட்டாரங்களில் பாராட்டப்பட்டது.

## வரலாற்றில் நிலைத்து நிற்கும் சாதனைகள்:

எடப்பாடியார் மருத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்திய காலம், சுகாதார சேவைகள் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய காலமாக போற்றப்பட்டது. 7.5% இடஒதுக்கீடு, சமூக நீதி சார்ந்த அரசியலின் புதிய சின்னமாக மாறி, சாதாரண மாணவர்களுக்கு எதிர்காலத்தை உருவாக்கிய நடைமுறையாக நிற்கிறது. தமிழகத்தில் அரசியல் தலைவர்கள் பலர் ஆட்சி செய்துள்ளனர். ஆனால், மக்கள் நலனை நேரடியாகத் தொட்டுத் தாக்கத்தை ஏற்படுத்திய சீர்திருத்தங்கள் மிகச் சிலரால் மட்டுமே செய்யப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமானவை புரட்சித் தமிழர் எடப்பாடி பழனிசாமி கொண்டு வந்த மருத்துவக் கட்டமைப்பு மாற்றங்களும், 7.5% இடஒதுக்கீடும் ஆகும்.

இவை இரண்டும் ஆட்சி அதிகாரத்தின் சாதாரண கொள்கை முடிவுகள் அல்ல. தமிழ்நாட்டின் தலைமுறையையே உயர்த்தும் வரலாற்று முடிவுகள். ஆகவே, புரட்சித்தமிழர் எடப்பாடி பழனிசாமி அவர்களின் பெயர், மருத்துவம் மற்றும் கல்வி துறையில் என்றும் பொற்காலச் சின்னமாக நினைவுகூரப்படும்.

கலைச்செல்வி

# புரட்சித்தலைவி என்ற சிங்கப்பெண்



இந்த உலகில் இன்றளவும் ஒடுக்கப்பட்ட அல்லது பின்தங்கிய சமூகமாகக் கருதப்படுவது பெண்களே. இதற்குக் காரணம் ஆணாதிக்கச் சிந்தனையே ஆகும். ஆணாதிக்கம் என்பது பெண்களை அடிமைப்படுத்தி அவர்களை ஒரு வட்டத்துக்குள் வைத்து எந்த உரிமைகளும் கொடுக்காமல் சுரண்டும் முறையாகும். தந்தை பெரியார், ஆணாதிக்கம் ஒரு தீவிரமான சமூகப் பிரச்சனை என்று கருதினார். பெண்களை அடிமைப்படுத்துவதற்கும், அவர்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் மறுப்பதற்கும் ஆணாதிக்கமே முக்கியக் காரணம் என்று அவர் கூறினார். பெண்கள் கல்வி பெறுவதற்கும், ஆண்களுக்கு நிகராகப் பணியில் சேர்வதற்கும் ஆணாதிக்கம் ஒரு தடையாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். திராவிட சித்தாந்தத்தின் அடிப்படை கூறு ஆண் ஆதிக்கத்தை எதிர்த்து பாலின சமத்துவத்தை உண்டாக்குவதாகும். ஆணாதிக்கத்தை எதிர்கொள்ளவும், பாலின சமத்துவத்தை அடையவும் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது அவசியமாகும்.

*1989, மார்ச் 15* அன்று தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் எழுதப்பட்ட கரும்புள்ளி நாள்.

கருணாநிதி தலைமையிலான திமுக அரசின் பட்ஜெட் கூட்டத்தின் முதல் நாள். தமிழக சட்டமன்றத்தில் ஒரு திமுக அமைச்சரால் புரட்சித்தலைவி ஜெயலலிதாவின் சேலை "இழுக்கப்பட்டு கிழிக்கப்படும்" என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது.



அன்று சட்டமன்றத்தில் நடந்தது, இரண்டு கட்சிகளுக்குள் ஏற்பட்ட தாக்குதல் அல்ல. அது ஒரு பெண்ணின் மீது நடத்தப்பட்ட திட்டமிட்ட வன்முறையாகும். அந்த பெண் தலைவர், சட்டமன்ற வாயிலில் நின்று எடுத்தார் ஒரு சபதம்.

"நான் மீண்டும் வருவேன், எதிர்க்கட்சித் தலைவராக அல்ல, தமிழகத்தின் முதல்வராக இந்த சட்டமன்றத்திற்குள் மீண்டும் நுழைவேன்" என்றார்! முதல்வராக பதவியேற்று, தமிழ்நாட்டை பல்வேறு துறைகளில் முன்னேற்றினார்.

## பெண்களுக்கு அதிகாரமளித்தல் (Women Empowerment) என்றால் என்ன?

பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்பது, ஒரு பெண்ணின் வாழ்வில் நடப்பவற்றைக் கட்டுப்படுத்தவும், தான் விரும்பியதைச் செய்ய சுதந்திரத்தையும் வலிமையையும் பெறும் ஒரு செயல்முறையாகும்.

அதிமுக அரசின் ஆட்சிக்காலத்தில், பெண்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகளும், வழங்கப்பட்ட சுதந்திரமும் இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தன. அம்மா அவர்களின் ஆட்சியில், பெண்களின்



சிரமத்தைக் குறைப்பதற்காக மிக்ஸி, கிரைண்டர், மற்றும் மின்விசிறிகள் வழங்கப்பட்டன. இது அவர்களின் நேரத்தைச் சேமித்து, ஆற்றலை அதிகரித்தது. இதன் மூலம், ஆண்களுக்கு இணையாகப் போட்டி போடும் வாய்ப்பும் கிடைத்தது. அதுவே உண்மையான பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகும்.



அம்மாவின் பெண்களுக்கான புரட்சி இதோடு முடிந்துவிடவில்லை, அது இன்னும் ஏராளம். அது வெறும் பொருள்சார்ந்த உதவிகளை மட்டும் கொண்டதல்ல, மாறாக, ஆணாதிக்கத்தை உடைத்து, பாலின சமத்துவத்தை உருவாக்கும் ஒரு சித்தாந்தப் புரட்சி ஆகும்.

அதற்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு, பகுத்தறிவு தேசம் என்று நாம் கருதும் கேரளத்தில் கூட இதுவரை ஒரு பெண் முதல்வர் வரவில்லை. ஆனால், தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டிலேயே இரண்டு பெண் முதல்வர்கள் இருந்திருக்கிறார்கள். பெண்களுக்கு அப்படியான வாய்ப்பு இந்தப் பெரியார் மண்ணில் இருக்கிறது என்றால், அதற்கு அ.தி.மு.க.வின் அண்ணா வழி திராவிடம் தான் காரணம்.

## அம்மாவின் பெண் விடுதலைக்கான புரட்சி:

எம். ஜி. ஆர் இருந்தவரை திமுகவினால் ஆட்சிக்கு வரமுடியவில்லை. எம்.ஜி.ஆர் இறந்த பின்பு அதிமுக உடைந்து விடும் இல்லையென்றால் திமுகவுடன் இணைந்துவிடும் என்று அனைவரும் எதிர்பார்த்திருந்த வேளையில் அந்தக் கட்சிக்கு தலைமை ஏற்று கிட்டத்தட்ட 25 வருடங்கள் அதை வெற்றிகரமாக வளர்த்தவர் ஜெ. ஜெயலலிதா என்னும் பெண் ஆளுமை.

பெரியாரின் சிந்தனைகளைத் துணிச்சலாக அறிமுகப்படுத்தி, தமிழ்நாட்டில் பெண்ணியத்தின் அடையாளமாக அவர் உருவெடுத்தார். ஆணாதிக்கம் வேரூன்றி இருந்த திமுகவிடம் இருந்து கடுமையான, அவதூறான தனிநபர் தாக்குதலையும் (character assassination) அவர் எதிர்கொண்டபோதிலும், தமிழக அரசியலில் ஆழமாக வேரூன்றி இருந்த ஆணாதிக்கத்திற்கு ஒரு வலுவான எதிர்சக்தியாக அவர் விளங்கினார்.

அதிமுக அரசால் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள், பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆதரவாக இருந்ததோடு, பெண்களின் உண்மையான அதிகாரமளித்தலையும் இலக்காகக் கொண்டிருந்தன. எம்.ஜி.ஆரின் மதிய உணவுத் திட்டத்துடன் தொடங்கி, பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை கணிசமாக அதிகரித்தது (சத்துணவு பற்றிய கட்டுரை, கடந்த இதழில் வெளியாகி உள்ளது).

ஜெயலலிதாவின் தொட்டில் குழந்தை திட்டம் 1992-ல் தொடங்கப்பட்டது. இது பெண் சிசுக்கொலைக்கு முற்றுப்புள்ளி வைத்து பாதுகாப்பான மற்றும் மாற்று வழியை வழங்கியது. இத்திட்டம் 1992 மற்றும் 2018-க்கு இடையில் 5,128 குழந்தைகளைக் காப்பாற்றியது, அவர்களில் 4,111 பேர் பெண் குழந்தைகள். இந்த முயற்சி, பிற நலத்திட்டங்களுடன் இணைந்து, மாநிலத்தின் குழந்தை பாலின விகிதத்தை மேம்படுத்த முக்கியப் பங்காற்றியது.

இதன் விளைவாக, 2001-ல் 1,000 ஆண்களுக்கு 942 ஆக இருந்த பெண் குழந்தைகளின் எண்ணிக்கை 2011-ல் 946 ஆக உயர்ந்தது.



1992-ல் இந்தியாவிலேயே முதன்முறையாக அனைத்து மகளிர் காவல் நிலையங்களை (AWPS) நிறுவியதன் மூலம், தமிழ்நாடு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தது. இதன் விளைவாக, இத்துறையில் தமிழ்நாடு ஒரு சிறப்பான இடத்தை வகித்தது. அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கை 2014ல் 199 ஆகவும், 2022-ல் 224 ஆகவும் அதிகரித்துள்ளது. மேலும், மாநிலக் காவல் துறையில் பெண்களின் பிரதிநிதித்துவம் 2022 நிலவரப்படி 19.1% ஆகக் கணிசமாக உயர்ந்தது. இது இந்தியாவில் இரண்டாவது அதிகபட்ச சதவீதமாகும். ஜனவரி 2023 நிலவரப்படி, தமிழ்நாட்டில் 25,334 பெண் காவலர்கள் பணிபுரிகின்றனர்.





மாநிலம் முழுவதும் மகளிர் சுயஉதவிக் குழுக்களை (SHGs) உருவாக்குவதில் புரட்சி தலைவி முக்கியப் பங்காற்றினார். இதன் மூலம், சுயஉதவிக் குழுக்களின் எண்ணிக்கை 6.08 லட்சத்திற்கும் அதிகமாகவும், உறுப்பினர்களின் எண்ணிக்கை 92 லட்சமாகவும் அதிகரித்தது. இந்த முயற்சி 2011 முதல் 2021 வரை 84,815 கோடி ரூபாய் கடன் இணைப்பை எளிதாக்கியது. மேலும், 20,000 சுயஉதவிக் குழுப் பயிற்சியாளர்களுக்கு "அம்மா மொபைல் போன்கள்" வழங்கப்பட்டன. இவை அனைத்தும் பெண்களின் பொருளாதார சுதந்திரத்தை வலுப்படுத்தின.

மேலும், அம்மா அரசின் கீழ் அம்மா உணவகங்கள் தொடங்கப்பட்டன. இங்கு மிகக் குறைந்த விலையில் உணவு (தயிர் சாதம் மற்றும் சாம்பார் சாதம் ரூ.3) வழங்கப்பட்டது. பெண்களுக்கு இலவச மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறிகள், அத்துடன் இலவச முழு உடல் பரிசோதனைகள் ஆகியவை வழங்கப்பட்டன. மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள், ஏராளமான கல்வி உதவித்தொகைகள், மற்றும் பள்ளி செல்லும் மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் போன்ற திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன.

இன்று, தி.மு.க. அரசு அ.தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்ட விலையில்லா மடிக்கணினிகள், மிக்ஸி மற்றும் கிரைண்டர் போன்ற அனைத்து விலையில்லாப் பொருட்களையும் நிறுத்திவிட்டது. தி.மு.க. அரசின் பொருளாதாரம் தனியார்மயத்தையும், வலதுசாரி கொள்கைகளையும் நோக்கித் திரும்பியுள்ளது. இத்தகைய கொள்கையை ஓர் அரசாங்கம் பின்பற்றுவதால், நலத்திட்டங்கள் நிறுத்தப்பட்டு, தனிநபர்வாதம் அதிகரிக்கிறது. சமூக நலன் என்ற கொள்கையும் பலவீனப்படுகிறது. இதுவே திராவிடக் கொள்கைகளுக்கு எதிரானது.


தமிழ்நாட்டில் தாய் தெய்வமாக வணங்கப்படும் அம்மன், தன் பக்தர்களுக்கு அருள்புரிபவளாகவும், அதே சமயத்தில் தன் எதிரிகளுக்கு அழிவையும் தருபவளாகவும் கருதப்படுகிறாள். இதேபோல் புரட்சித்தலைவி, ஒரு தீயசக்தியை எதிர்க்கும் தெய்வத்தைப் போல அதிகாரத்தைக் கையாண்டார். திமுகவின் ஆணாதிக்கத்திற்கு எதிராகப் போராடி, தமிழகப் பெண்களுக்கு அதிகாரமளித்தார்.

## திமுக-வின் ஆணாதிக்கமும் அம்மா என்னும் எதிர்வினையும்:

தி.மு.க-வில் உள்ளவர்கள் தங்களைப் பெரியாரிஸ்டுகள் என்று கூறிக்கொண்டாலும், அவர்கள் அடிப்படையில் ஆணாதிக்கவாதிகளே. ஆணாதிக்கத்திற்கு எதிராகப் பேசுவதும் போராடுவதும் போலத் தோன்றினாலும், அவர்கள் ஆணாதிக்கவாதிகளாகவே இருக்கின்றனர். ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தபோது, தி.மு.க.வினராலும் பிற ஆணாதிக்கவாதிகளாலும் அவர் கடுமையான விமர்சனங்களுக்கும் தனிப்பட்ட தாக்குதல்களுக்கும் உள்ளானார். திராவிட சித்தாந்தத்தின் அடிப்படைப் பெண்ணியம் என்றபோதிலும், தி.மு.க. அதை ஒருபோதும் பின்பற்றியதில்லை. தங்களைப் பெரியாரிஸ்டுகள் என்று அழைத்துக்கொண்ட தி.மு.க.வினர், ஜெயலலிதாவை சித்தாந்தரீதியாகவோ அல்லது அரசியல்ரீதியாகவோ விமர்சிப்பதில்லை. மாறாக, இழிவான வார்த்தைகளைப் பயன்படுத்தி, ஒரு பெண்ணைத் தாக்க, ‘திராவிடத்திற்கு எதிரான’ அரசியலைத் தொடர்ந்து பயன்படுத்தினர். தி.மு.க.வின் மேடைப் பேச்சுகளில் அவர்கள் ஜெயலலிதாவை எவ்வளவு இழிவாக திட்டினார்கள் என்பது அனைவருக்கும் நினைவிருக்கும். அந்த வார்த்தைகளைக் கேட்டு, போலித் திராவிடக் கட்சியான தி.மு.க.வின் கண்மூடித்தனமான ஆதரவாளர்கள் கைதட்டி உற்சாகமடைந்தனர். ஆனால், உண்மையான திராவிடத் தொண்டர்கள் அந்தப் பாதையை ஒருபோதும் பின்பற்றியதில்லை.

**அரசியலில் இருக்கும் பெண்களின் தனிப்பட்ட வாழ்க்கையைக் கொண்டு அவர்களை இழிவுபடுத்தும் (character assassination) முறையைத் தொடங்கி வைத்தது தி.மு.க.தான். பெண்களை இழிவுசெய்வதும், அரசியல்ரீதியாக அவர்களைப் பின்தங்க வைப்பதும் தி.மு.க-வின் அரசியலாக இருந்தது. புரட்சித்தலைவி சட்டமன்றத்தில் ஏளனமாகச் சிரிக்கிறார் என்றவர்கள் தான் இவர்கள். ஒரு பெண் வாய் திறந்து சிரிப்பது அவ்வளவு பெரிய தவறா?**

இவர்கள் எப்போதும் தங்களுக்கு அடிமையாக பெண்கள் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்.



### ‘பெரியார் மண், சமூக நீதி மண்’

என்று வார்த்தைக்கு வார்த்தை பேசும் தி.மு.க. அரசு, இன்று பெண்களின் பங்கை வெறும் கோஷம் போடுவதற்கும், பால் குடம் எடுப்பதற்கும் மட்டுமே கட்டுப்படுத்தி வைத்துள்ளது.

பெண்கள் வளர்ச்சி பெற்றுவிட்டார்கள் என்று அவர்கள் உடனே சொல்வார்கள். “கனிமொழியைப் பாருங்கள், தமிழச்சி தங்கபாண்டியனைப் பாருங்கள்” என்றும் உதாரணம் காட்டுவார்கள். வாரிசு அரசியலில் பெண்களுக்குப் பதவி கிடைப்பது புதிது அல்ல. அவர்களுக்கான இடம் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டதுதானே? வாரிசுப் பின்னணி இல்லாத எத்தனை பெண் தொண்டர்கள் கட்சியில் உயர் மட்டத்தில் இருக்கிறார்கள்? எத்தனை பேர் கட்சித் தலைவர்களாக உள்ளனர்?

இன்று திராவிடம், பெண்ணியம், சமத்துவம், சகோதரத்துவம் என்று பேசிக்கொண்டிருக்கும் திமுக என்றோ ஜெயலலிதா அம்மாவை அவமானப்படுத்திய போதே திராவிடத்தின் கொள்கைகளை கொன்று புதைத்து விட்டது. திராவிடத்தை காப்பாற்றிக்கொண்டிருக்கும் அதிமுக எழுந்துவிட்டது.

*“1989இல் அவமானத்துடன் வெளியேறிய ஜெ. ஜெயலலிதா அவர்கள் புரட்சித்தலைவியாக 1991இல் அதே சட்டமன்றத்திற்குள் முதல்வராக நுழைந்தார் ஆளும் தாயாக!*

*அவர் கண்களில் அழுகையில்லை, அவரிடம் நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் இருந்தது.*

*அவரை திட்டியவர்கள், தலையைத் தாழ்த்தினர்..*

கோட்டை கொத்தளத்தில் மக்களுக்கான முதல்வராக இருந்த புரட்சித்தலைவி அவர்கள் இன்றும் மக்களின் இதய சிம்மாசனத்தில் அம்மாவாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.



அருண் ஜெயபிரகாஷ்

# கொடி பிடிக்கும் தொண்டன்

திராவிடம் என்றால் அனைவருக்கும் அனைத்தும் என்ற அடிப்படை நோக்கத்தை திமுக மாற்றியமைத்து அனைத்தும் தன் குடும்பத்திற்கு என்ற தீவிர நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. தன் குடும்ப உறுப்பினர்களை மட்டும் கருத்தில் கொண்டு அனைத்து உயர் பதவிகளிலும் தன் குடும்பத்திற்கு பட்டா போட்டு தன் கட்சியின் கடைக் கோடி தொண்டனின் உழைப்பை சுரண்டி, கடின உழைப்பிற்கு ஏமாற்றத்தை பரிசளிக்கிறது. கட்சியை வளர்க்க ஒரு சாதாரண தொண்டன் கடும் வெயிலிலும் மழையிலும் போஸ்டர் ஒட்டி கூட்டம் கூட்டி பாடுபட்டதன் விளைவாக தான் இன்று திமுக ஆட்சி அமைத்திருக்கிறது. கொடிபிடிக்க மட்டுமா தொண்டன்? எப்போது தொண்டர்கள் அரியணையில் ஏறுவது? அதிமுகவில் ஒரு சாதாரண தொண்டன் கூட முதலமைச்சராகலாம் என்பதற்கான சிறந்த உதாரணம் தான் இன்றைய எதிர்கட்சித் தலைவர் மாண்புமிகு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள். அறிஞர் அண்ணாவின் வழியில் ஆட்சி செய்த அதிமுக அரசு தொண்டர்களை ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி அழகு பார்த்ததையும், தொண்டர்களை கொடி பிடிக்க மட்டும் பயன்படுத்திய கொடிய திமுக அரசின் வாரிசு அரசியல் பற்றியும், கொடி பிடித்த தொண்டர்களின் குரலை பற்றியும் இக்கட்டுரையில் பார்ப்போம்.

## தொண்டனுக்கு தோள் கொடுக்கும் அதிமுக:

**மக்களிடம் செல்!**
**மக்களுடன் வாழ்!**
**மக்களிடம் கற்றுக்கொள்!**
**மக்களுக்கு சேவையாற்று!**

- அறிஞர் அண்ணா

என்ற அண்ணாவின் கூற்றை அதிமுக இன்றுவரை கடைப்பிடித்து வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவரான தமிழ்மகன் உசேன், அரசுப் பேருந்தில் ஓட்டுநராக பணிபுரிந்தவர். கடந்த 1972 ஆம் ஆண்டு தி.மு.கவில் இருந்து எம்.ஜி.ஆர் விலகியபோது, நாகர்கோவிலில் இருந்து மேலூருக்கு தான் ஓட்டி வந்த அரசுப் பேருந்தை பாதியிலேயே நிறுத்திவிட்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருக்கு ஆதரவு தெரிவித்தார். மேலும் எம்.ஜி.ஆர் தனிக்கட்சியைத் தொடங்க வேண்டுமென சென்னை அடையாறில் உள்ள சத்யா ஸ்டூடியோவில் நடைபெற்ற கூட்டத்தில் கையொப்பமிட்ட 11 பேரில் ஒருவராக தமிழ்மகன் உசேன் இருந்தார். கட்சிக்கு அயராது உழைத்த காரணத்தினால் கடந்த அதிமுக ஆட்சியின் போது வக்பு வாரியத் தலைவராகவும், அவைத் தலைவராகவும் பதவி கொடுக்கப்பட்டது. கடை கோடி தொண்டனாக இருந்தவரும் அவைத் தலைவராகலாம் என்ற வரலாற்றை உருவாக்கித் தந்தது அதிமுக அரசு.

ப.தனபால் அவர்கள், சேலம் மாவட்டம் கருப்பூரில் மிகவும் எளிய பின்தங்கிய குடும்பத்தில் பிறந்தவர். சாதாரண தொண்டனாக இருந்த அவரை, அவரின் கடின உழைப்பின் காரணமாக சட்டசபையில் சபாநாயகராக அமர்த்தியது அதிமுக அரசு. இவர், 1977, 1980, 1984, 1991, 2001, 2011, சட்டசபை தேர்தல்களில் வெற்றி பெற்று சட்டசபை உறுப்பினராக மிகச் சிறப்பாக பணியாற்றினார். மேலும் 2012ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை இரு முறை சட்டப்பேரவை சபாநாயகராகவும், 2001-ல் உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

100 நாள் வேலைத் திட்டம் பணியாளரான ஜி.சித்ரா அவர்களை புரட்சித் தலைவி அம்மா, 2016 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் ஏற்காடு சட்டமன்றத் தொகுதியில் எம்.எல்.ஏ வாக போட்டியிட செய்து வெற்றி பெறச் செய்தார். இதனைத் தொடர்ந்து அதிமுக அரசு 2021 ஆம் ஆண்டிலும் ஜி.சித்ரா அவர்களை அதே ஏற்காடு சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக அறிவித்து வெற்றி பெறச் செய்தது.

இவரைத் தொடர்ந்து தற்போது கள்ளக்குறிச்சி எம்.எல்.ஏ எம்.செந்தில் குமார், இதற்கு முன் வாடகை வீட்டில் இருந்த ஒரு சாதாரண பெயிண்டர். தற்போது அவரின் கடின உழைப்பினாலும் கட்சிக்கு விசுவாசமாக உழைத்த காரணத்தினாலும் 2021 சட்டமன்றத் தேர்தலில் அவருக்கு அதிமுக அரசு, கள்ளக்குறிச்சியில் போட்டியிட வாய்ப்புக் கொடுத்தது. அவர் தேர்தலில் மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று அரியணையில் ஏறினார்.

மேலும் பவானி சாகர் சட்டமன்ற உறுப்பினர் அ.பண்ணாரி, டாஸ்மாக்கில் விற்பனையாளராக பணிபுரிந்தவர். அவருக்கு அதிமுக அரசு 2021 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் வாய்ப்பளித்து வெற்றி பெறச் செய்தது.



## கொடி பிடித்த தொண்டன் முதலமைச்சர்:

தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் ஒரு சாதாரண கொடிப் பிடித்த தொண்டன் கூட முதலமைச்சர் ஆகலாம் என நிரூபித்து காட்டியவர் தான் எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள். தந்தை பெயரை இன்னிஷியலாக வைத்து பதவிக்கு வரும் அரசியல் சூழலில், அண்ணாவின் வழி வந்த அதிமுக அரசு, ஓர் எளிய விவசாயியை முதலமைச்சராக்கி, திராவிட மண்ணில் ஓர் அரசியல் புரட்சியை ஏற்படுத்தி இருக்கிறது. தன் கல்லூரி காலங்களில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகரான இவர், விவசாயிகளிடமிருந்து வெல்லத்தை பெற்று கவிந்தபாடி மற்றும் பெருந்துறை சந்தையில் விற்பனை செய்து வந்தார். பின்பு அதிமுகவில் இணைந்த இவர் ஓர் அசைக்கமுடியாத தலைவராக உருவெடுத்தார்.

# வெறி கொண்ட தொண்டன் கரி கொண்டு எழுதுவான்

- பேரறிஞர் அண்ணாவின் கூற்று

**இதற்கு பொருள் ஓர் உண்மையான தொண்டர் பெயிண்ட் மற்றும் பிரஷ் இல்லாவிட்டாலும், கரியைக் கொண்டு சுவரில் எழுதுவார் என்பதாகும். இதைப் போல தான் எந்த ஓர் அரசியல் பின்புலமும் இல்லாமல் தன் கடின உழைப்பினால் மட்டுமே தொண்டனாக தொடங்கிய எடப்பாடியாரின் பயணம் முதலமைச்சர் வரையில் அவரை கொண்டு சென்றது.**

» எம்.எல்.ஏ - 1989, 1991, 2011, 2016, 2021 (எடப்பாடி).

» எம்.பி - 1998 (திருச்செங்கோடு).

» நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் - 2011-2017.

» தமிழ்நாடு முதலமைச்சர் - 2017-2021

» 2021 பிறகு தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர்



## நாளைய முதலமைச்சர்

இவர் இன்று ஓர் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல், அண்ணாவின் தொலைநோக்குப் பார்வையின் அடையாளமாக திகழ்கிறார். கட்சியின் தலைமைப் பதவி என்பது பிறப்புரிமையிலிருந்து பெறுவது அல்ல எனவும், கட்சி அதன் தொண்டர்களுக்கு சொந்தமானது எனவும் நிரூபித்துக் காட்டினார்.

## மன்னராட்சியில் முடி சூடிய மன்னர்களும் சிற்றரசர்களும்:

திமுக அரசு இன்று சமத்துவம், சமூக நீதி என்று மக்களையும் தொண்டர்களையும் தன் மன்னராட்சி கொள்கையால் அடிமை படுத்தி வருகிறது. கடைக் கோடி தொண்டர்களை தெரு கோடியில் நிறுத்திவிட்டு தன் குடும்ப உறுப்பினர்களை மட்டும் அரியணையில் ஏற்றி, அண்ணாவையும் பெரியாரையும் பெயரளவில் பேசிக்கொண்டு எள் அளவு கூட சாதாரண தொண்டனுக்கு வாய்ப்பு அளிக்காமல் மறுக்கிறது.

கருணாநிதி குடும்பம், கட்சி உயர்பதவிகளில் தன் குடும்ப உறுப்பினர்களை மட்டுமே அமர்த்துகிறது. மேலும் எம்.எல்.ஏ மற்றும் எம்.பி பதவியில் அடுத்தக்கட்டத் தலைவர்களின் வாரிசுகளையே முன்னிறுத்துகிறது. பேரறிஞர் அண்ணா, "வீட்டுக்கும் ஆட்சிக்கும் இடையே ஒரு கோடு வேண்டும்" என்று பலமுறை வலியுறுத்தியிருக்கிறார்.

அன்றே குடும்ப அரசியலை அவர் தீவிரமாக எதிர்த்தவர். மேலும் இந்தியாவிலேயே முதன்முறையாக திமுகவின் நிர்வாகிகளைத் தேர்தல் வழியாக தேர்ந்தெடுக்கும் நடைமுறையை அறிமுகப்படுத்தினார்.

1967 தேர்தலுக்கான வேட்பாளர்கள் தேர்வையும் அமெரிக்க பாணியில் அவர் நடத்தினார்.

அப்படிப்பட்டவர் தொடங்கிய கட்சி இன்று கருணாநிதி குடும்பம் எந்த எதிர்ப்பும் இல்லாமல் தன் வாரிசுகளுக்கு முடிசூட்டி வருகின்றது.

மேலும் 1955-ல் கட்சியின் இரண்டாவது மாநாட்டிலேயே பொதுச்செயலாளர் பதவியிலிருந்து விலகி, "தம்பி வா... தலைமையேற்க வா!" என்று தொலை நோக்கு பார்வையுடன் வாரிசு அரசியலுக்கு எதிராக பேசினார்.

ஆனால் இன்று கருணாநிதியின் திமுக, மகனே வா... தலைமையேற்க வா! என்று வழிவழியாக சிம்மாசனத்தில் வாரிசுகளை அமர்த்துகிறது.

மேலும் கட்சியின் மூத்த தலைவர்களும் எந்த ஓர் எதிர்ப்பும் தெரிவிக்காமல் அரசரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு தலைமைக்கு விசுவாசமாக இருக்கிறார்கள். இது முற்றிலும் திராவிட சிந்தாந்தத்திற்கு எதிரான செயல்பாடுகள்.


திமுக அரசு, போலி திராவிடத்தை பேசி எட்டுக்கோடி மக்களையும், தொண்டர்களையும் சுரண்டுகிறது.

திராவிடத்திற்கு நேர் எதிராக செயல்படும் திமுக, பூடம் தெரியாமல் சாமி ஆடுவது போல உண்மைத் திராவிடத்தை மறைத்து மக்களை ஏமாற்றி வருகிறது.



# மன்னராட்சியில் முடி சூடிய மன்னர்களும் சிற்றரசர்களும்!




போதிய இட வசதி இல்லாததால் சிலர்
விடுபட்டிருக்கலாம்.
சிரமத்திற்கு மன்னிக்கவும்!

## அறிஞர் அண்ணாவின் வழியில் அதிமுக:

தலைச் சிறந்த அரசாங்கம் என்றால், மக்களுக்காக தான் அரசாங்கமே தவிர, குடும்பத்திற்காகவோ சுய லாபத்திற்காகவோ அரசாங்கம் இல்லை. தமிழ்நாட்டை 31 ஆண்டு காலம் மிகச் சிறப்பாக ஆட்சி செய்த அரசு அதிமுக அரசு. அது திராவிட சிந்தாந்தத்தை தமிழ்நாட்டில் மிக ஆழமாக வேரூன்றச் செய்திருக்கிறது என்பதைத் வரலாறும் சம கால அரசியலும் உணர்த்துகிறது. சாதாரண தொண்டனை அரியணையில் ஏற்றி அன்று அறிஞர் அண்ணாவின் படைத்தலைவரான எம்.ஜி.ஆர், அண்ணாவிற்குப் பெருமை சேர்த்தார்.

அவரின் அரசியல் வாரிசான புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்களும், கடைக்கோடி தொண்டரான புரட்சித் தமிழர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்களை அடையாளம் காண்பித்து, இன்று அதிமுகவை அண்ணாவின் திராவிட வழியில் அவர் சிறப்பாக வழிநடத்துகிறார்.

ஒடுக்கப்பட்ட சமூகத்தை சார்ந்த சத்தியவாணி முத்து என்பவரை முதன்முதலாக மத்திய அமைச்சரவையில் பங்கேற்கச் செய்தார் எம்.ஜி.ஆர். விடுதலைச் சிறுத்தை கட்சியினர் கருணாநிதியிடம் பொதுத் தொகுதி கேட்ட போது "உங்களுக்கு எதற்கு பொது தொகுதி?" என கேட்டார் கருணாநிதி. ஆனால் புரட்சித் தலைவி அம்மா தலித் எழில்மலை என்ற பட்டியலின வேட்பாளரை திருச்சி பொது தொகுதியில் நிற்கவைத்து நாடாளுமன்ற உறுப்பினராக மாற்றினார்.

சமத்துவம் மற்றும் சமூகநீதி ஆகிய இரண்டையும் அதிமுக தலைவர்கள் தனது இரு கண்களைப் போல பாதுகாத்து கட்சியிலும், ஆட்சியிலும் நிலைநாட்டியுள்ளனர்.

அதிமுகவின் கடைசி தொண்டன் இருக்கும் வரை அறிஞர் அண்ணா தான் அதிமுகவையும், தமிழ்நாட்டையும் ஆண்டு கொண்டிருக்கிறார் என்று அர்த்தம். அதிமுக என்றுமே தொண்டர்களுக்கான கட்சி. கொடி பிடிக்கும் தொண்டன் அதிமுகவில் மட்டும் தான் உயர் பதவிக்குச் செல்ல முடியும்.


ஏனென்றால் இது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.







# குறுக்கெழுத்து




## இடமிருந்து வலம்

1. பேரறிஞர் அண்ணா எழுதிய புதினம் இது. காதல் என்று தொடங்கும் இந்த தலைப்பில் ஒரு திரைப்படம் கூட வெளிவந்தது. (5 எழுத்து)

2 பெரியார், அண்ணா அவர்களின் கொள்கையே இதுதான். ஐந்தெழுத்து சொல் இது.

3. பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய குறுங்காவியம் ஒன்று. சஞ்சீவி எனத் தொடங்கும் அந்த காவியத்தின் கடைசி மூன்றெழுத்து இது.

4. திராவிட இயக்கங்களின் கொடியில் தவறாமல் இரண்டு நிறங்கள் இடம்பெறும். அந்த இரண்டு நிறங்களில் இந்த நிறமும் ஒன்று.

5. பேரறிஞர் அண்ணா எழுதிய புகழ்பெற்ற புத்தகங்களில் ஒன்று. (ஐந்தெழுத்து சொல்)

6. திராவிடம் கடவுள் மறுப்பு கொள்கை கொண்டது என்றாலும் இவர் மீது திராவிடத்துக்கு மதிப்பு உண்டு. காரணம் இவர் கடவுள் என்று கொண்டாடப்பட்டாலும் கடவுள் மறுப்பாளர். (4 எழுத்து)

7. பேரறிஞர் அண்ணாவின் வளர்ப்பு மகன் இவர். அவரது பெயரில் கடைசி எழுத்து விடுபட்டுள்ளது.

8. அஇஅதிமுகவின் தொண்டர்களுக்கு இப்படியொரு பெயர் உண்டு.

9. பேரறிஞர் அண்ணா எழுதிய ஒரு புத்தகத்தின் இறுதி நான்கெழுத்து சொல். இதே பெயரில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நடித்த திரைப்படம் ஒன்றும் வெளிவந்தது.

10. தந்தை பெரியார் நடத்திய நாளிதழின் பெயர் இது. இன்றும் இந்த நாளிதழ் வெளிவருகிறது. (4 எழுத்து)

15. பேரறிஞர் அண்ணாவின் துணைவியார் பெயர் (2 எழுத்து)

## மேலிருந்து கீழ்

1. பேரறிஞர் அண்ணா பிறந்த ஊர் இதுதான். ஆறெழுத்து நகரம்.

7. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் போட்டியிட்டு வென்ற சட்டமன்றத் தொகுதி இது. ( 6 எழுத்து)

11. பேரறிஞர் அண்ணா இப்படியொரு வேடமேற்று நாடகத்தில் நடித்திருக்கிறார். அந்த ஆறெழுத்து கதாபாத்திரத்தின் கடைசி நான்கெழுத்து இது.

## வலமிருந்து இடம்

12. தந்தை பெரியார் அடிக்கடி உச்சரிக்கும் ஒரு காய்கறியின் பெயர் இது. (5 எழுத்து)

13. பேரறிஞர் அண்ணா உருவாக்கிய திமுகவின் சின்னம் உதிக்கும் திசை இது ( 4 எழுத்து)

14. நடமாடும் பல்கலைக்கழகம் என்று அழைக்கப்பட்ட நெடுஞ்செழியன் அவர்களுக்கு இப்படி ஒரு பெயரும் உண்டு. (4 எழுத்து)

## கீழிருந்து மேல்

3. திராவிடம் ஒழிக்க நினைப்பது இந்த தீமையைத்தான். (2 எழுத்து)

14. பேரறிஞர் அண்ணா எழுதிய ஒரு புத்தக தலைப்பின் பின்பாதி. இதே பெயரில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நடித்த திரைப்படம் ஒன்றும் உள்ளது.

17. பேரறிஞர் அண்ணா உருவாக்கிய க.க.க என்ற முப்பெரும் கொள்கைகளில் இரண்டாவது கொள்கை இது. (5 எழுத்து)

*விடைகள் பக்கம்: 53*

ஹரீஷ் முருகன்

# தமிழர்களை ஏமாற்றிய
# கருணாநிதியின் திராவிடம்


திராவிடத்தின் முதன்மையான கொள்கை, தமிழர்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பதும், சமூக சமத்துவத்தை நிலைநாட்டுவதும் ஆகும். ஆனால், அண்ணாவின் மறைவுக்குப் பிறகு, கருணாநிதி தலைமையிலான திமுக இந்தக் கொள்கைகளை நிறைவேற்றத் தவறிவிட்டது. மேலும் திராவிட சித்தாந்தத்தை தவறாக மக்களிடம் கொண்டு சேர்த்தார்கள்.

போலி திராவிடத்தின் பெயரால் திமுகவைக் கைப்பற்றிய கருணாநிதி, திராவிட சித்தாந்தத்திலிருந்து விலகி, ஒரு குடும்ப கட்சியாக மாற்றினார். அவர்கள் குடும்ப நலனில் அதிக கவனம் செலுத்தியதால், ஈழத்தமிழர்களின் உரிமைக்கும், தமிழ்நாட்டின் தமிழர்களின் குரலுக்கும் செவிசாய்க்கத் தவறிவிட்டனர்.

**இதன் விளைவாக, 2009-ல் ஈழத்தமிழர் இனப்படுகொலை நிகழ்ந்தது.**

இந்த நிகழ்வு, திமுகவின் போலி திராவிடத்திற்கு அப்பால் செல்லுமாறு தமிழர்களைத் தூண்டியது. இதன் விளைவாக, "திராவிடம் வேறு, தமிழர்கள் வேறு" என்ற பிளவு சில மக்களிடையே ஏற்பட்டது.

ஆனால், அதிமுக திராவிட சித்தாந்தத்தில் தெளிவாகவும், தொலைநோக்குப் பார்வையுடனும் அண்ணாவின் வழியைப் பின்பற்றி, தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடியது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா, மற்றும் புரட்சித் தமிழர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் தமிழ்நாட்டில் திராவிட சித்தாந்தத்தை நிலைநாட்டினர்.







### எம்.ஜி.ஆர். மற்றும் தமிழீழம்:


1987-இல், விடுதலைப் புலிகள் அமைப்புக்கு, குறிப்பாக இலங்கைக்கான இந்தியத் தூதர் ஜே.என். தீட்சித் மூலம், இந்தியா அழுத்தம் கொடுத்ததாகப் புலிகள் குற்றம் சாட்டினர். இதன் நோக்கம், புலிகளை இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்கச் செய்து, அவர்களின் ஆயுதங்களைக் கைவிடுமாறு செய்வதாக இருந்தது. ஆனால், புலிகளின் தலைவர் பிரபாகரன் இந்த யோசனையை எதிர்த்தார். அதற்கு எம்.ஜி.ஆர் "உங்கள் முடிவு எதுவாக இருந்தாலும், நான் அதை ஆதரிப்பேன்," என்று தைரியமாகக் கூறி பிரபாகரனுக்கு தனது ஆதரவைக் காட்டினார்.

கருணாநிதி தமிழ் ஈழத் தலைவர்களைக் குழப்பி, ஒரே குழுவின் கீழ் ஒன்றுபடுவதைத் தடுக்க முயன்றபோது, எம்.ஜி.ஆர். தமிழர்களுக்கு தீர்வு தமிழீழம் தான் என்ற பார்வையில் தெளிவாக இருந்தார். அவர் பிரபாகரனைச் சந்தித்து, புலிகளின் இயக்கம் தான் மிகச் சிறந்தது, ஏனெனில் அவர்கள் தான் அனைத்துத் இயக்கங்களிலும் மிகவும் திறமையானவர்கள் மற்றும் அர்ப்பணிப்புள்ளவர்கள் என்று கூறினார்.

எம்.ஜி.ஆர். போராளிகளின் ஒற்றுமையின்மை குறித்து தனது கவலையைத் தெரிவித்து வந்தார்.

அவர் மீண்டும் மீண்டும் 'ஒற்றுமையே பலம்' என்று வெளிப்படுத்தினார். மேலும் எம்.ஜி.ஆர், பிரபாகரனுக்கு அவரது இலக்குகளை முன்னோக்கி கொண்டு செல்ல அனைத்து வழிகளிலும் உதவினார்.

ஏப்ரல் 1984-இல், எம்.ஜி.ஆர். தமிழ் போராளி குழுக்களின் தலைவர்களை அழைத்து, அவர்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்த ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். அதே சமயம், கருணாநிதி தனது அரசியல் ஆதாயத்திற்காக, எம்.ஜி.ஆரின் இந்த நடவடிக்கையைத் தடுக்க விரும்பினார். இதன் காரணமாக, எம்.ஜி.ஆர் திட்டமிட்டிருந்த சந்திப்புக்கு ஒரு நாள் முன்பே, போராளிக் குழுத் தலைவர்களுடன் ஒரு கூட்டத்திற்கு அவசரமாக அழைத்தார்.



கருணாநிதியின் நடவடிக்கை, அவரது அழைப்பு தமிழர்களின் நலனுக்காக அல்ல, மாறாக அரசியல் லாபத்திற்காக மட்டுமே என்பதை வெளிப்படுத்தியது.

எம்.ஜி.ஆர். புலிகளின் பேச்சுவார்த்தையாளர் பாலசிங்கத்திடம், "ஏன் கருணாநிதியின் அழைப்புக்கு நீங்கள் கலந்து கொள்ளவில்லை?" என்று கேட்டபோது, பாலசிங்கம் பதிலளித்தார், "ஒற்றுமை குறித்த கூட்டத்திற்கு முதலில்


அழைத்த தலைவர் நீங்கள் தான். நீங்கள் தெரிவித்த பிறகு கருணாநிதி உங்களைத் தோற்கடிக்க வேண்டும் என்று நினைத்து மற்றொரு கூட்டத்தை கூட்டினார். அவ்வாறு செய்வதன் மூலம் அவர் அரசியல் ஆதாயம் தேட விரும்புகிறார் என்று நாங்கள் நினைத்ததால் அதில் கலந்து கொள்ளவில்லை."

பாலசிங்கம் சொன்ன அனைத்தையும் கேட்ட பிறகு, எம்.ஜி.ஆர்., "இப்போது எனக்கு எல்லாம் புரிகிறது. நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்? என்ன உதவி எதிர்பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார்.

பாலசிங்கம் இரண்டு கோடி ரூபாய் என்று கோரியபோது, எம்.ஜி.ஆர் எந்தத் தயக்கமும் இல்லாமல் அதை முழு மனதுடன் வழங்கினார். இது, தமிழ் அடையாளத்திற்கு முதலிடம் கொடுக்கும் திராவிட சித்தாந்தத்தைப் பாதுகாக்க அவர் கொண்டிருந்த உறுதியை வெளிப்படுத்துகிறது. இச்சம்பவம் குறித்த விரிவான தகவல்கள், மோகன்தாஸ் எழுதிய 'எம்.ஜி.ஆர்.: தி மேன் அண்ட் தி மித்' என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரபாகரன் மற்றும் எம்.ஜி.ஆர் இடையேயான உறவு, வேறு எந்த அரசியல் தலைவர்களுடனும் இருந்ததைவிட மிகவும் ஆழமானது. எம்.ஜி.ஆர்., பிரபாகரனுக்கு அனைத்து வகையிலும் ஆதரவளித்தார்.

ஒருமுறை, விடுதலைப் புலிகளுக்கான ஆயுதங்கள் டெல்லியில் தடுத்து வைக்கப்பட்டன. அந்த ஆயுதக் கொள்கலனை (container) விடுவிக்க டெல்லி உதவப் போவதில்லை என்பதை பிரபாகரன் உணர்ந்தார்.




உடனடியாக, எம்.ஜி.ஆரின் உதவியை நாடி பாலசிங்கத்தை அனுப்பினார்.

பாலசிங்கம், எம்.ஜி.ஆரை அவரது வீட்டில் சந்தித்து, ஆயுதங்கள் அவரது சொந்தப் பணத்தில் வாங்கப்பட்டது என்றும், அவை விடுவிக்கப்பட்டால் மட்டுமே பிரபாகரனால் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றும் எடுத்துரைத்தார்.

எம்.ஜி.ஆர். எந்தத் தயக்கமும் இல்லாமல் உடனடியாகச் செயல்பட்டார். ஆயுதங்களை விடுவிக்க உதவினார். இந்த நிகழ்வு, தமிழ் ஈழ மக்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் ஆதரவு அளிப்பதே திராவிட சித்தாந்தத்தின் முக்கியக் கொள்கை என்பதில் எம்.ஜி.ஆர். தெளிவாக இருந்தார் என்பதைக் காட்டுகிறது.

எம்.ஜி.ஆரின் ஆதரவு அதோடு நின்றுவிடவில்லை. 1985-ஆம் ஆண்டில், புலிகள் தங்கள் செயல்பாடுகளை



விரிவாக்கம் செய்ய நிதி தேவைப்பட்டது. பிரபாகரன் மீண்டும் பாலசிங்கத்தை எம்.ஜி.ஆரிடம் அனுப்பி உதவிக் கோரினார்.

"உங்களுக்கு எவ்வளவு பணம் தேவை?" என்று எம்.ஜி.ஆர். கேட்டதற்கு, "ஐந்து கோடி ரூபாய்" என்று பாலசிங்கம் பதிலளித்தார். அப்போது, எம்.ஜி.ஆர். "எந்தக் கவலையும் பட வேண்டாம்" என்று கூறி, தனது சொந்தப் பணத்திலிருந்து நான்கு கோடி ரூபாயை வழங்கினார்.

எம்.ஜி.ஆர்., ஒரு வருடத்திற்கும் மேலாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு, 1987 டிசம்பரில் காலமானார். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, அதே ஆண்டின் தொடக்கத்தில் பாலசிங்கம் அவரைச் சந்தித்து பிரபாகரனின் அக்கறையை வெளிப்படுத்தினார்.

எம்.ஜி.ஆரின் இந்தச் செயல், தமிழ் ஈழத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான உறவு, "தமிழ் வேறு, திராவிடம் வேறு" என்ற பிளவு இல்லாமல், ஒரே சித்தாந்தத்தின் கீழ் ஒன்றுபட்டதாகக் காணப்பட்டது என்பதை உணர்த்துகிறது.

கருணாநிதி தனது போலி திராவிட அரசியலின் மூலம் குடும்ப நலனுக்கு முக்கியத்துவம் அளித்து, திராவிட சித்தாந்தத்திலிருந்து விலகியபோது, எம்.ஜி.ஆர். அண்ணாவின் திராவிட வழியைப் பின்பற்றி, தமிழர்களின் நலனை ஒரு முற்போக்கு திசையில் கொண்டுசென்றார்.

### அம்மா - சொன்னதை செய்தார்

*2013-ஆம் ஆண்டில், புரட்சித்தலைவி ஜெயலலிதா, அஇஅதிமுக கட்சி ஒரு தனி தமிழ் ஈழத்தை உருவாக்குவதற்குப் பாடுபடும் என்று அறிவித்தார். திமுக போரைத் தடுக்கத் தவறிய நிலையில், ஜெயலலிதா தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்.*

*அதே 2013-ஆம் ஆண்டில், அவர் தமிழ்நாடு மாநில சட்டமன்றத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தை நிறைவேற்றினார்.*

அந்தத் தீர்மானம் கீழ்க்கண்டவற்றை வலியுறுத்தியது

- இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகள் குறித்து ஒரு பாரபட்சமற்ற, சர்வதேச, மற்றும் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்.
- இலங்கை மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும்.
- காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை அந்த நாட்டிலிருந்து இடமாற்றம் செய்ய வேண்டும்.

**இந்தத் தீர்மானம், ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்காக ஜெயலலிதா எடுத்த உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது.**

ஜெயலலிதா இந்தியப் பிரதமருக்குத் தொடர்ச்சியாகக் கடிதங்கள் எழுதி, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் (UNHRC) மத்திய அரசு இலங்கைக்கு எதிராக ஒரு வலுவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இதன் விளைவாக, இந்தியா இறுதியாக ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் (UNHRC) இலங்கைக்கு எதிராக வாக்களித்தது.

மேலும், அவர் இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷாவையும் அவரது கூட்டாளிகளையும் போர்க்குற்றங்களுக்காக சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டும் என்று வெளிப்படையாகக் கோரினார். ஈழத்தமிழர்கள் எளிதாக வேலைவாய்ப்பு பெற உதவும் வகையில், அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இந்தத் தொடர்ச்சியான அழுத்தங்கள் மட்டுமின்றி, ஜெயலலிதா தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழர்களைப் பாதுகாக்கப் பல முயற்சிகளை மேற்கொண்டார். இலங்கைத் தமிழர்கள் நீண்ட காலமாகத் தமிழ்நாட்டில் உள்ள முகாம்களுக்கு உள்ளேயும் வெளியேயும் வாழ்ந்து வருவதைக் குறிப்பிட்டு, தனது ஆட்சியின் மூலம் அவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தருவதாகவும் உறுதியளித்தார். அவர் சொன்னபடியே செயல்பட்டார்.

முகாம்களில் வசிக்கும் ஈழத்தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ஜெயலலிதாவின் அரசாங்கம் குறிப்பிடத்தக்க நிதி ஒதுக்கீடுகளைச் செய்தது.

## வீட்டு வசதி

ஒரு முக்கிய முயற்சியாக, 14 மாவட்டங்களில் உள்ள 21 முகாம்களில் வசிக்கும் அகதிகளுக்காக 2,500 புதிய, நீடித்த வீடுகளைக் கட்டுவதற்காக ₹25 கோடி ஒதுக்கி உத்தரவிட்டார். இந்த நிதி, குடிநீர், சுகாதார வசதிகள், சாலைகள் மற்றும் தெருவிளக்குகள் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட கூடுதல் நிதியிலிருந்து வேறுபட்டது.

## நலத்திட்டங்கள்

ஜெயலலிதா பல்வேறு மாநில நலத்திட்டங்களை ஈழத்தமிழர்களுக்கும் விரிவுபடுத்தினார். இதில், முதிய அகதிகளுக்கு மாதத்திற்கு ₹1,000 முதியோர் ஓய்வூதியம், ஆதரவற்ற விதவைகள் மற்றும் பெண்களுக்கு ஓய்வூதியங்கள் ஆகியவை அடங்கும். மேலும், முகாம்களுக்குள் உள்ள 416 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ₹10,000 மானியமும் வழங்கப்பட்டது.

## போலி திராவிடத்தின் முகம் - கருணாநிதியின் நிலைப்பாடு:

ஜெயலலிதா மற்றும் எம்.ஜி.ஆர். ஆகியோர் தமிழர்களுக்காக எடுத்த உறுதியான நிலைப்பாடுகளுக்கு நேர்மாறாக, கருணாநிதியின் குடும்பக் கட்சியான திமுக மற்றும் காங்கிரஸ் செய்த துரோகங்கள் ஏராளம்.

2009-ஆம் ஆண்டு ஈழப்போர் உச்சத்தில் இருந்தபோது, தனது மத்திய அமைச்சரவையில் இருந்து பிரதிநிதிகளை விலக்கிக்கொள்வதற்கோ, அல்லது மத்திய அரசுக்கான ஆதரவை வாபஸ் பெறுவதற்கோ பதிலாக, கருணாநிதி "மூன்று மணி நேர உண்ணாவிரதம்" என்ற நாடகத்தை அரங்கேற்றினார். அப்போது அவர் மத்திய அரசுக்கான ஆதரவை வாபஸ் பெற்றிருந்தால், இலங்கைத் தமிழர்களை காப்பாற்றியிருக்கலாம்.இது தமிழர்களுக்குச் செய்யப்பட்ட மிகப் பெரிய துரோகம். ஏனெனில், அவர் தமிழர்களைக் காப்பாற்றுவதைவிட, தனது குடும்பத்தின் அரசியல் அதிகாரத்தையும், சொத்துக்களையும் பாதுகாப்பதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.

2009-ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் தேதி, போரை நிறுத்துவதற்காக, கருணாநிதி மூன்று மணி நேர உண்ணாவிரதம் இருந்து, இலங்கையில் போர் நின்றுவிட்டதாக அறிவித்தார். ஆனால், ஐ.நா. அறிக்கை இந்த இனப்படுகொலை 2009 மே மாதம் வரை நீடித்ததாகத் தெளிவாகக் கூறுகிறது. தனது தேர்தல் ஆதாயங்களுக்காக அவர் தமிழ் மக்களை ஏமாற்றினார். இலங்கையில் லட்சக்கணக்கான தமிழர்களின் இனப்படுகொலைக்கு அவரும் ஒரு முக்கிய காரணமாக அமைந்தார். இதுவே மக்கள் கருணாநிதியை வெறுப்பதற்கு, முக்கியக் காரணம்.

இதேபோல், 2013-இல் போலியாக அரசியல் லாபத்திற்காக இலங்கை விவகாரத்தைக் காரணம் காட்டி ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (UPA) அரசாங்கத்துக்கான ஆதரவை அவர் வாபஸ் பெற்றார்.

ஆனால், தனது மகள் கனிமொழி மாநிலங்களவை உறுப்பினராக வர வேண்டும் என்று விரும்பியபோது அதே காங்கிரஸின் ஆதரவைப் பெற்றார். இந்தக் காட்சிகள் அனைத்தும், அவர் தனது குடும்ப நலனை மட்டுமே மையமாகக் கொண்டிருந்ததைக் காட்டுகிறது.

இலங்கை விவகாரத்தால் தமிழக மக்கள் அனைவரும் கோபத்தில் இருந்தபோது, கருணாநிதி இரட்டை வேடம் போட்டார்.

ஈழப்போரின் காயங்களும் கண்ணீரும் இன்னும் வற்றாத நிலையில், அவரது குடும்பம் ஐபிஎல் போட்டிகள் மூலம் லாபம் ஈட்ட திட்டமிட்டது.

கருணாநிதியின் பேரனான கலாநிதி மாறனுக்குச் சொந்தமான சன் குழுமத்தின் ஐபிஎல் அணியான சன்ரைசர்ஸ் ஹைதராபாத், 2012-ஆம் ஆண்டில் குமார் சங்கக்காராவை அணியின் தலைவராகத் தக்கவைத்துக்கொண்டது.

அத்துடன், இலங்கை ஆல்-ரவுண்டர் திசாரா பெரேராவை அணிக்குள் கொண்டு வர $675,000 டாலர் என்ற பெரிய தொகையைச் செலவிட்டது.

இது தமிழர்கள் மீது அவர்களுக்கு எந்தவிதமான உணர்வும் இல்லை என்பதையும், அவர்கள் தங்கள் குடும்பத்தின் நலனில் மட்டுமே அக்கறை கொண்டிருந்ததையும் தெளிவாகக் காட்டியது.

### புரட்சித்தலைவியின் உறுதியான நிலைப்பாடு:

2013-ஆம் ஆண்டு மார்ச் மாதம், தமிழ்நாட்டில் நடந்த எந்த ஐபிஎல் போட்டியிலும் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்க ஜெயலலிதா தடை விதித்தார். இதன் மூலம், உண்மையான திராவிடர்கள் ஈழ தமிழர்களின் பக்கம் நிற்பார்கள் என்பதை அவர் நிரூபித்தார்.

### பேரறிவாளன் விடுதலை: புரட்சித் தமிழரின் பங்களிப்பு:

பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், மற்றும் புரட்சித் தலைவி அம்மா ஆகியோரின் வழியில், புரட்சித் தமிழர் எடப்பாடி பழனிசாமி தமிழர்களின் கண்ணியம் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதில் உறுதியுடன் செயல்பட்டார்.

2017-ஆம் ஆண்டில், அவர் தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி, பேரறிவாளனுக்கு பரோல் வழங்கப் போராடினார்.

26 ஆண்டுகளுக்குப் பிறகு தனது மகனைப் பரோலில் விடுவித்ததற்காக, பேரறிவாளனின் தாய் அற்புதம்மாள், எடப்பாடி பழனிசாமிக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

"எனது மகன் எங்களுடன் நிரந்தரமாக இருக்க முயற்சிகளை மேற்கொள்ளுமாறு நான் முதல்வரிடம் கேட்டுக்கொண்டேன். அவர் சொன்னது போலவே செய்தார்" என்று அற்புதம்மாள் கூறினார்.

இந்தச் செயல், அண்ணாவின் உண்மையான திராவிட சித்தாந்தத்தின் பாரம்பரியத்தை எடப்பாடி பழனிசாமி முன்னெடுத்துச் செல்கிறார் என்பதைக் காட்டுகிறது.

அதிமுக, தமிழர்களின் பிரச்சனைகளை ஒரு முக்கியப் பிரச்சனையாகவே கருதியதால்தான் தொடர்ந்து வெற்றி பெற முடிந்தது.

இன்று, சில அரசியல் கைக்கூலிகள் "தமிழ்த் தேசியம் வேறு, திராவிடம் வேறு" என்று பேசி, மக்களைத் தவறான திசைக்கு அழைத்துச் செல்கிறார்கள். இந்தப் போலி திராவிடர்களுக்கு, அண்ணாவின் திராவிடம் தான் உண்மையான தீர்வு. அதை உறுதிச் செய்வது அஇஅதிமுக தான் .







ஜெனிபர் ஜான்

## தோல்வியடைந்த - ஸ்டாலினின்
# போலி திராவிட மாடல்!

திராவிட சித்தாந்தம் என்பது பகுத்தறிவு, பெண்ணியம், சமூகநீதி, மதசார்பின்மை மற்றும் அனைத்து சமத்துவ சமூகத்தை உண்டாகும் கொள்கைகளை உடையது. தமிழ் நாட்டில் அதிகபடியாக 31 வருடம் ஆட்சியில் இருந்த அஇஅதிமுக இந்த சித்தாந்தத்தை கடைபிடித்ததின் விளைவுதான் இன்று தமிழ்நாடு, இந்தியாவில் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்குவதற்குக் காரணம்.

திராவிட மாடல் என்பது திராவிட சித்தாந்தத்தை பின்பற்றியதின் ஒரு விளைவுதான். இந்தியாவில் சில மாநிலங்கள் பொருளாதார மற்றும் தொழில்துறை வளர்ச்சியில் சிறந்து விளங்கும். ஆனால் சமூக முன்னேற்ற குறியீடுகளில் பின்தங்கி இருக்கும். தமிழ்நாட்டில், பொருளாதார வளர்ச்சியுடன் சமூக நீதி மற்றும் சமமான வளர்ச்சியும் சேர்ந்து இருக்கும். திராவிட சித்தாந்தம், விளிம்புநிலை மக்களின் முன்னேற்றம் மற்றும் சமூக சமத்துவத்தை உறுதி செய்வதை முதன்மை இலக்காகக் கொண்டு, பொருளாதார மற்றும் தொழில்துறை வளர்ச்சியை உள்ளடக்கிய அனைவருக்குமான முன்னேற்றத்தை வலியுறுத்துகிறது.

திராவிட சித்தாந்தம், தமிழ்நாட்டின் அரசியல் மற்றும் வளர்ச்சிக் களத்தில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில், தொழில்துறை மற்றும் சமூக முன்னேற்றம் இரண்டிற்கும் சமச்சீரான அணுகுமுறையின் மூலம் அதன் கொள்கைகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

### உண்மை திராவிடத்தின் பொருளதார வளர்ச்சி:

புரட்சி தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு ஒரு முக்கிய தொழில்துறை மையமாக மாற்றம் அடைந்தது. 1990ஆம் ஆண்டு காலக்கட்டங்களில் ஃபோர்டு மோட்டார் கம்பெனியை (Ford Motor Company) ஈர்த்தது ஒரு முக்கிய சாதனை. இது ஹூண்டாய் (Hyundai), பிஎம்டபிள்யூ (BMW), ரெனால்ட் - நிசான் (Renault - Nissan) போன்ற உலகளாவிய வாகனத் தயாரிப்பு நிறுவனங்களின் வருகைக்கு வித்திட்டு, சென்னைக்கு "இந்தியாவின் டெட்ராய்ட்" (Detroit of India) என்ற பட்டத்தைப் பெற்றுத்தந்தது. அவரது நிர்வாகத்தின் தமிழ்நாடு தொழில் கொள்கை 2014 மற்றும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு (GIM) 2015 ஆகியவை, ஒப்புதல்களை எளிமையாக்கவும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கவும் ஒற்றைச் சாளர அனுமதி (single-window clearance) முறையை அறிமுகப்படுத்தியது.

இந்த தொழில் வளர்ச்சியின் அடுத்தகட்டமாக முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி 2017 ஆம் ஆண்டில், "முகமற்ற, காகிதமற்ற, தொடர்பற்ற" (faceless, paperless, and contactless) முதலீட்டு ஒப்புதல்களை வழங்கும் ஒரு டிஜிட்டல் தளமான தமிழ்நாடு ஒற்றைச் சாளர வலைதளத்தை (TNSWP) தொடங்கி வைத்தார். அவரது அரசாங்கம் தமிழ்நாடு மின்னணு வன்பொருள் உற்பத்தி கொள்கை 2020 மற்றும் தமிழ்நாடு தொழில் கொள்கை 2021 மூலம் பொருளாதார பல்வகைப்படுத்தலை மேலும் முன்னெடுத்துச் சென்றது. இக்கொள்கைகள் வளர்ந்து வரும் துறைகளில் முதலீடுகளை ஈர்ப்பதையும்,

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தன. ஆனால், ஸ்டாலின் மாடல் அரசு தொழில் கொள்கைகளை சரியாக அணுகாததன் விளைவே, உழைப்பாளர்களைச் சுரண்டும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அது முற்றிலும் திராவிட சித்தாந்தத்திற்கு எதிராகவும், வலதுசாரி சிந்தனையுடன் ஒத்தும்போகிறது.

### உண்மை திராவிடத்தின் சமூக முன்னேற்றம் மற்றும் சமூக நீதி:

இந்த பொருளாதார முன்னேற்றங்களுக்கு இணையாக புரட்சி தலைவி அம்மா அவரது ஆட்சியில் சமூக மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளித்தார். இதுதான் திராவிட மாடலின் உண்மையான சாரத்தை வெளிப்படுத்துகிறது. மாநில பட்ஜெட்டில் சுமார் 37% சதவீதம் மானியங்களுக்காக ஒதுக்கப்பட்டது. இது பொதுமக்களுக்கு உறுதியான பலன்கள் கிடைப்பதை உறுதி செய்தது. அவரது ஆட்சியில் மிக்ஸி, கிரைண்டர் போன்ற அத்தியாவசிய வீட்டுப் பொருட்கள் வழங்கபட்டன. அதுபோல மாணவர்களுக்கான மடிக்கணினிகள், விலையில்லா மிதிவண்டிகளும் வழங்கப்பட்டன. அது வாழ்க்கைத் தரத்தையும், கல்விக்கான முன்னேற்றத்தையும் மேம்படுத்துவதற்கான சமூக நல நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியது. இந்த முயற்சிகள், வலுவான தொழில்துறைக் கொள்கைகளுடன் இணைந்து, பொருளாதார வளர்ச்சியுடன் சமூக சமநிலையை நிலைநாட்டுவதில் அஇஅதிமுகவின் அர்ப்பணிப்பை நிரூபித்தது. இது அனைவரையும் உள்ளடக்கிய முன்னேற்றமாக திகழ்ந்தது.

### ஸ்டாலின் போலி திராவிட மாடல்:

திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) தன்னை ஒரு தொழில்நுட்ப மற்றும் தொழில்துறை தலைமையாக சித்தரித்துக் கொள்கிறது. மேலும் தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்குத் தான் மட்டுமே ஒரே உந்து சக்தி என்று பொய் பிரச்சாரம் செய்கிறது. பொருளாதார வளர்ச்சியுடன் சமூக நீதி மற்றும் சமமான வளர்ச்சியை ஒருங்கிணைக்க இவர்கள் அடிப்படையிலேயே தோல்வியடைந்துவிட்டார்கள். தி.மு.க-வின் கவனம், ஒட்டுமொத்த சமூதாயத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக, "குடும்ப வளர்ச்சி" மற்றும் ஒரு சிலருக்கு மட்டுமே பலன் அளிக்கும் பொருளாதார வளர்ச்சியில் இருந்துள்ளது.

புரட்சித்தலைவி ஜெயலலிதாவின் ஆட்சியில், அவர் சமூக நலனுக்கு முன்னுரிமை அளித்து, பட்ஜெட்டில் பெரும் பகுதியான 37 சதவீதத்தை மானியங்களுக்காக ஒதுக்கியது. இது பெரிய சமூகத் திட்டங்களுக்கு நிதியளித்தது. தி.மு.க.வின் தற்போதைய மானிய ஒதுக்கீடு மிகவும் குறைந்துள்ளது. இது சமூக நலச் செலவினங்களுக்கான தீவிர ஈடுபாட்டிலிருந்து விலகிச் செல்வதைக் காட்டுகிறது. திராவிட மாடலின் நோக்கம் பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; அது சமூக நீதி, மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதே ஆகும்.

இன்னும் எளிமையாகச் சொல்ல வேண்டுமானால், பொருளாதார அல்லது தொழில்துறை குறியீடுகளான மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP), பணவீக்கம் (Inflation), நிதிப் பற்றாக்குறை (Fiscal Deficit), வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) ஆகியவற்றில் சரியான விகிதம் இருக்கவேண்டும். அதேபோல் சமூக முன்னேற்றக் குறியீடுகளான பாலினச் சமத்துவம் மற்றும் பாதுகாப்பு , சமூக ஒருங்கிணைப்பு (Social Inclusion), சுயமரியாதை மற்றும் தொழிலாளர்களின் உரிமை, நலவாழ்வு மற்றும் ஆரோக்கியம், குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பாலின சமத்துவம் போன்ற குறியீடுகளிலும் ஒரு மாநிலம் சிறந்து விளங்கவேண்டும். அப்போதுதான் அது திராவிட மாடல் அரசு ஆகும்.

ஆனால், 'ஸ்டாலின் மாடல்' அரசு அதை செய்ய தவறிவிட்டது. இதன் விளைவாக, தமிழ்நாட்டில் மக்களுக்கு இடையே வர்க்கப் பிரிவினை, பெண்களுக்குப் பாதுகாப்பின்மை, சாதிப் பாகுபாடு நிறைந்த ஒரு சமூகத்தை உருவாகியுள்ளது. இந்தப் பிளவுகள் கவலையளிக்கும் சமூகக் குறியீடுகளில் வெளிப்படுகின்றன.

தமிழகத்தில் பாலியல் தொல்லை வழக்குகள் 2023-ல் 46ஆக இருந்தது. அது 2024-ல் 96 ஆக அதிகரித்து இரட்டிப்பாகியுள்ளது. பாலியல் வழக்குகள் 2023-ல் 406 ஆக இருந்தது. அது 2024ல் 471 ஆக அதிகரித்து 16 சதவீதமாக உயர்ந்துள்ளது. பாலியல் சீண்டல் வழக்குகள் 2022ல் 1,414 ஆக இருந்தது. அது 2024-ல் 1,885 ஆக அதிகரித்து 33.3 சதவீதமாக உயர்ந்துள்ளது. போக்சோ (POCSO) வழக்குகள் 2023-ல் 4,581 ஆக இருந்தது, 2024-ல் 6,969 ஆக 52.1% அதிகரித்துள்ளது. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) அறிக்கையின்படி, பெண்களுக்கு எதிரான குற்றங்களில் தண்டனை விகிதம் வெறும் 15.6% ஆக உள்ளது. இது தேசிய சராசரியான 25.3 சதவீதத்தை விடக் மிகவும் குறைவு.

ஒரு துறையில் ஒரு ஆண் ஒரு ரூபாய் சம்பாதிக்கிறார் என்றால், அதே துறையில் வேலை செய்யும் பெண் வெறும் 74 பைசா மட்டுமே சம்பாதிக்கிறார். இதில் சுயதொழில் செய்யும் பெண்கள் ஒவ்வொரு ரூபாய்க்கும் 37 பைசா மட்டுமே ஈட்டுகின்றனர். இந்தப் புள்ளிவிவரத்தை பார்க்கும்போதே ஊதிய ஏற்றத்தாழ்வு மிகவும் தெளிவாக தெரிகிறது.

குழந்தை திருமண வழக்குகள் 2022ல் 118 ஆக இருந்தது. அது 2023-ல் 184 ஆக உயர்ந்து 56 சதவீதமாக அதிகரித்துள்ளது. மேலும், கர்ப்பப்பை வாய் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், மற்றும் உடல் பருமன் போன்ற நோய்களில் தமிழ்நாடு முன்னிலையில் இருப்பது, மாநிலத்தின் விரிவான பொது சுகாதாரக் குறைபாடுகளைக் காட்டுகிறது.

நிலையான சாதிப் பாகுபாடு வெளிப்படையாக உள்ளது. இங்கு மொத்தத் திருமணங்களில் 2.4% மட்டுமே சாதி மறுப்புத் திருமணங்கள் (Inter-caste marriages). இது கேரளா (20%), கோவா (27%), மற்றும் பஞ் சாப் (22%) ஆகிய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த விகிதம். மேலும், இந்த போலி திராவிட மாடல் அரசு, சாதி மறுப்பை ஏற்காததால், ஆணவ கொலைகள் அதிகரித்துள்ளன.

கடந்த செப்டம்பர் 22ஆம் தேதி, திருச்சியில் இரு ஒப்பந்தச் தூய்மை பணியாளர்கள் கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டப்போது மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்த சோக நிகழ்வு நடந்தது. இந்த மாதிரியான தொடர் சம்பவங்கள் சாதி அடிப்படையிலான தொழிலாளர்களின் சுரண்டலை தெளிவாக காட்டுகிறது. சமூக சமத்துவத்தை உறுதி செய்வதிலும் தி.மு.க.வின் போலி திராவிட மாடல் தோல்வியை சந்தித்துள்ளது. மேற்சொன்ன அனைத்து விஷயங்களிலும் ஸ்டாலினின் போலி திராவிட மாடல் தோல்வியடைந்திருக்கிறது.



ராகுல் சீனிவாசன்

# பட்டியலின சமூக மக்களின் மேம்பாட்டில் புரட்சித்தலைவி



தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் பட்டியல் இனத்தின் எழுச்சி தனித்துவமான பாதையை வகுத்து வருகிறது. சமூக நீதி, சமத்துவம், அரசியல் பங்கு ஆகியவை இணைந்து வந்தபோதிலும், பல தசாப்தங்களாகத் தலித் சமூகத்தின் அரசியல் நிலை சிக்கலான கட்டங்களை சந்தித்தது.

தமிழக அரசியலை பின்னோக்கி பார்த்தால் திராவிட அரசியலின் துவக்கம் சமூக நீதியை முன்வைத்து துவங்கியது எனலாம். திராவிட முன்னேற்ற கழகத்திலிருந்து பிரிந்து புரட்சித்தலைவர் எம்ஜிஆர், அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தை துவக்கியபோது, அவருக்கு அதிக அளவில் ஆதரவுக் குரலாக முன் நின்றவர்கள் பட்டியலின மக்கள்.

பட்டியலின அரசியல் என்பது வெறும் வாக்கு வங்கி மட்டுமில்லை, ஒரு சமூக அடையாளம். தமிழ்நாட்டில் பெரியார் இயக்கம், அம்பேத்கர் சிந்தனை, சமூக இயக்கங்கள் ஏற்படுத்திய தாக்கம் பட்டியலின அரசியலுக்கான அடுத்தக்கட்டத்தை அமைத்தன.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பங்களிப்பு பற்றிப் பேசாமல் பட்டியலின அரசியலை தனித்துப் பார்க்க முடியாது.

புரட்சித்தலைவி ஜெயலலிதா தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் பட்டியலின சமூகத்திற்கு அரசியல் பாதுகாப்பையும், அடையாளத்தையும் வழங்கியது. இதனால் பட்டியலின அரசியல் தனித்துக் கிளையாகாதபடி, பெரிய அரசியல் கட்சியின் ஓர் அங்கமாக உள்ளது.

புரட்சித்தலைவி, அவர்களின் காலகட்டத்தில் பல பட்டியலின தலைவர்களுக்கு தனது அமைச்சரவை மற்றும் சட்டமன்றப் பொறுப்புகளை வழங்கி முன்னிறுத்தினார்.

தமிழகத்தில் 1990-க்குப் பின் தனித்த பட்டியலின கட்சிகள் உருவானாலும், புரட்சித்தலைவி தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் ஒன்றுபட்ட அரசியல் மேடையைக் கொடுத்ததால், பெரும்பான்மையான பட்டியலின சமூகம் அதிமுகவின் பின்னால் இருந்தது.

அம்மாவின் ஆட்சியில் பட்டியலின சமூகத்திற்கான இடம் தனித்துவமானது.





அவர்கள் எதிர்கொண்ட சமூக பொருளாதார சவால்களுக்கு தீர்வு காணும் பல திட்டங்களை அவர் கொண்டு வந்தார்.

அருந்ததியர் சமூகத்தை சேர்ந்த என் வீட்டில் யாரும் சாப்பிடமாட்டார்கள் என்று அதிமுக சட்டமன்ற உறுப்பினர் தனபால் வருத்தப்பட்டதை கேட்டு அம்மா செய்த அதிரடியான விஷயம் 'உங்க வீட்டுல சாப்பிடாம புறக்கணிச்சவங்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கே நீங்கதான் இனி சாப்பாடு போடப் போறீங்க என்று தனபாலை உணவுத்துறை அமைச்சராக்கினார். இது திராவிட அரசியலை திரும்பிப் பார்க்க வைத்த வரலாற்றுச் சம்பவம். இதன் நீட்சியாக, 2011-ல் அதிமுக ஆட்சி அமைத்த போது அவருக்கு சட்டப்பேரவை சபாநாயகர் பொறுப்பை வழங்கினார்.

தகுதி மற்றும் திறமைக்கு இடமளிக்கும் அரசியல் என்ற கொள்கையுடன், பட்டியலினத்தவருக்கு, புரட்சித்தலைவி ஜெயலலிதா அவர்கள் மாநில அரசியலில் முக்கியப் பதவிகள் வழங்கி உயர்த்தினார். சட்டமன்றம், பாராளுமன்றத்திற்குள் பல பட்டியலின தலைவர்கள் நுழைய புரட்சித்தலைவியின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. தொடர்ந்து பட்டியலினத்தின் அரசியல் குரல் மாநில எல்லையைத் தாண்டி வெளிப்பட்டது.

பட்டியலினத்தை சேர்ந்தவர்களை தனித் தொகுகளிலும் மட்டுமே நிறுத்தாமல் பொதுத் தொகுதிகளிலும் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் என்பது தமிழ்நாட்டில் கிட்டதட்ட 50 ஆண்டுகளாக இருந்து வரும் குரலாகும்.

இதற்கு வரலாற்றிலேயே உரிய செவிசாய்த்து அதிகமான பொதுத்தொகுதிகளில் பட்டியலின வேட்பாளர்களை நிறுத்தி சட்டப்பேரவைக்குள் நுழைய வைத்தவர் அம்மா.

சமூகநீதி பற்றி மூச்சுக்கு முன்னூறு முறை பேசும் திமுக இதை தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு முறை கூட செய்யவில்லை. பட்டியலினத்தவர்கள் பொதுத்தொகுதிக்கு ஆசைப்படலாமா? எனக்கேட்டு அவமதித்து, தனித்தொகுதிகளில் மட்டுமே வாய்ப்பளித்தார்.

ஊராட்சி, பேரூராட்சி போன்ற அடிமட்ட பகுதிகளில் இருந்து உருவான எளிய பின்னணி கொண்ட பட்டியலின பிரதிநிதிகளை, சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர்களாக்கி உரிய அங்கீகாரம் அளித்தவர் புரட்சித்தலைவி.

அம்மாவின் ஆட்சிக் காலங்களில் பட்டியலின மக்களுக்கு பல்வேறு சமூக நலத்திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. வீடு, கல்வி, வேலை வாய்ப்பு, பாதுகாப்பு அனைத்திலும் முன்னுரிமை வழங்கப்பட்டது.

இந்த அணுகுமுறையே, பட்டியலின சமூக மேம்பாட்டிற்கு வழிவகுத்தது.

அதிமுகவின் அடித்தளத்தில் இன்று வரை தலித் தலைவர்கள் வலுவாக நிலைத்திருப்பதற்குக் காரணம், புரட்சித்தலைவி அவர்களின் சமூகநீதிப் பார்வையேயன்றி வேறில்லை.

நளினா

# தூய்மை பணியாளர்களின்
## கண்ணீர் கதைகள்...

பணியின் போது தூய்மை பணியாளர்கள் உயிரிழப்பது என்பது தொடர்கதையாகவே உள்ளது. ஊரையே சுத்தப்படுத்தி தூய்மைப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் உயிருக்கே பாதுகாப்பற்ற சூழ்நிலை தான் உள்ளது.

அப்படி உயிரிழப்பவர்களுக்கு உரிய இழப்பீடு கூட முறையாக வழங்க முடியாமல் இந்த அரசு அலைக்கழித்து வருகிறது. கடந்த ஆகஸ்ட் மாதம் சென்னை கண்ணகி நகரில் மின்சாரம் தாக்கி பெண் தூய்மைப்பணியாளர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.




கடந்த ஜூலை மாதம் சென்னை தாம்பரம் பகுதியில் தூய்மை பணியில் ஈடுபட்டிருந்த பெண் தூய்மை பணியாளர் கார் மோதி உயிரிழந்தார்.

இப்படி ஒவ்வொரு மாதமும் உயிரிழப்புகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. செய்தி ஊடகங்களில் அது மரண செய்தி. அதுவும் ஒரு நாளுக்கு மேல் பேசப்படுவதில்லை. அந்த அளவுக்கு தமிழ் ஊடகங்களுக்கு வாய்ப்பூட்டு போடப்பட்டுள்ளது.

பலியான தூய்மைப் பணியாளர்களின் கண்ணீர் கதைகள் ஏராளம்.

அப்படி ஒரு துயரம் தான் சித்தாலப்பாக்கம் ராணி குடும்பத்தின் கதை. தாம்பரம் மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியாளராக பணியாற்றி வந்தார் ராணி.

சேலையூர் -வேளச்சேரி சாலையில் இரவு நேரத்தில் தூய்மை பணியில் ஈடுபட்ட போது, சாலையில் அதி வேகமாக வந்த கார் மோதி விபத்துக்குள்ளானார். அந்த விபத்தில் அவர் உயிரிழந்தும் போனார். இவ்வளவு தான் செய்திகளில் நமக்கு வந்த தகவல்கள்.

இந்த சம்பவம் குறித்து அவரது கணவர் ஏழுமலை சொன்னது, “ராத்திரி 12:30 மணி இருக்கும். நான் ரோட்டுல கிடந்த குப்பைகளை அள்ளி வண்டியில கொட்டிக்கிட்டு இருந்தேன். அப்போ திடீர்னு ஒருத்தர் ஓடிவந்து, ‘தூய்மைப்பணியாளர் ஒருத்தங்க அடிபட்டுக் கிடக்கிறாங்க’ன்னு சொன்னாரு. ‘ஐயோ... என்ன ஆச்சோ’ன்னு ஓடிப்போயி பார்த்தா, என் இதயமே நின்னுபோயிருச்சு. அங்கே கை துண்டாகி, தலையில அடிபட்டு என் மனைவி மூச்சுப்பேச்சு இல்லாமக் கிடந்தாள். பதறியடிச்சு ஹாஸ்பிட்டலுக்குத் தூக்கிட்டு போனோம். நாலு நாள் கோமாவுல இருந்தா.. ஆனா காப்பாத்த முடியல, அப்போ அவ மூணு மாச கர்ப்பமா இருந்தா”னு அழுகையை அடக்கமுடியாமல் வெடித்து அழுதார்.

தொடர்ந்து பேசிய ஏழுமலை, “எங்க குடும்பத்துல நான்தான் மூத்த பையன். நாலு தம்பிங்க, ஒரு தங்கச்சி. எங்க அப்பா, அம்மா இறந்துட்டாங்க. ராணி என் வாழ்க்கையில வந்த பிறகுதான், என் தம்பி, தங்கச்சிக்கு ஓர் அம்மாவா இருந்து கல்யாணம் பண்ணி வெச்சா. மீதி ரெண்டு தம்பிகளுக்கும் பொண்ணு பார்த்திட்டு இருந்தா.

ராணியோட அப்பா அஞ்சு வருசத்துக்கு முன்னாடி இறந்துட்டார். அவங்க அம்மாவை பார்த்துக்க யாரும் இல்ல. அவங்களை கூட்டிட்டு வந்து இங்கேயே வெச்சுக்கிட்டா. இப்படி, குடும்பத்துல உள்ளவங்கள தாங்குறதுல, பார்த்துக்கிறதுல உண்மையிலேயே அவ ராணிதான்.

தம்பி, தங்கச்சியோட கல்யாணச் செலவுக்கு வாங்கின கடனை அடைக்கத்தான் என்னோடு சேர்ந்து, என் மனைவி ராணியும் ரெண்டு வருசத்துக்கு முன்னால வேற வழியில்லாம, தூய்மைப்பணிக்கு வந்தா.

எங்க முதல் குழந்தை திவாகருக்கு இப்போ 11 வயசு. ஆறாவது படிக்கிறான். வீட்டுக் கஷ்டத்தால, அடுத்த குழந்தை பெத்துக்குற சூழல் இல்லாம இருந்தோம். அதுக்கப்புறம், 11 வருசம் கழிச்சு இப்போதான் ரெண்டாவது குழந்தைக்குத் தயாரானோம். பெண் குழந்தை வேணும்னு ரொம்ப ஆசையா இருந்தோம். குடும்ப வறுமை காரணமாக, மூணு மாத கர்ப்பிணியா இருந்தும் வேலைக்கு வந்தாங்க.

எங்களுக்கு மார்னிங் ஷிப்ட், நைட் ஷிப்ட்னு ரெண்டு ஷிப்ட் இருக்கு. இரவு 10 மணியில இருந்து காலை வரை குப்பையை அள்ளணும். வழக்கமா இரவு நேரத்துல கடைகள், உணவகங்களில் இருந்து அதிக குப்பைகளை கொட்டுவாங்க. அதை நாங்க விடிய விடிய சுத்தம் செஞ்சாதான் காலையில பொதுமக்கள் சிரமம் இல்லாம நடமாட முடியும்.





ஆனா இரவுப்பணியில் தூய்மைப்பணியை மேற்கொள்கிற எங்களுக்கு பாதுகாப்பு இல்லை. நிறைய ஆபத்துகள் இருந்தும் எங்களுக்கு மாசம் ரூ. 10,500 தான் சம்பளமா தராங்க. நாங்க ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யுறதால பணியின் போது உயிரிழந்தாக்கூட எங்களுக்கு உரிய நிவாரணம் வழங்குறதில்லை” என தூய்மைப் பணியாளர் ஏழுமலை கண்ணீர் விடுகிறார்.

தூய்மைப்பணியை தமிழக அரசு தனியாரிடம் ஒப்படைத்துள்ளது. ஒப்பந்ததாரர்கள், தூய்மைப் பணியாளர்களுக்கு மிகக் குறைந்த சம்பளமே வழங்குகின்றனர். தூய்மைப் பணியாளர்களுக்கு யூனிபார்ம், ரெயின்கோட், கிளவுஸ், செருப்பு, மாஸ்க் போன்ற பல்வேறு பாதுகாப்பு உபகரணங்கள் எதையும் முறையாக கொடுப்பதில்லை. ஸ்டாலின் அரசுக்குக்கோ, ஒப்பந்ததாரர்களுக்கோ தொழிலாளர்கள் மீது துளியும் அக்கறையில்லை. பணி நிரந்தரம் செய்தால் தூய்மைப் பணியாளர்களுக்கு குறைந்தபட்சம் 40,000 ரூபாய் சம்பளமும், உயிரிழந்தால் நஷ்ட ஈடும் கிடைக்கும். ஆனால் அதற்கு இந்த ஸ்டாலின் அரசு முன்வருவதில்லை.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் பாடல் ஒன்று,

சித்திரச் சோலைகளே
உம்மை நன்கு திருத்த இப் பாரினிலே
முன்னர் எத்தனை தோழர்கள்
ரத்தம் சொரிந்தனரோ
உங்கள் வேரினிலே...

இந்த சென்னை மாநகரம் சிங்காரமாக இருக்க எத்தனை தூய்மைப் பணியாளர்களின் உயிரை **இந்த ஸ்டாலின் அரசு பலிவாங்கியுள்ளதோ...?**

என்ற பாவேந்தரின் வரிகளுக்கு ஏற்ப, இந்த சென்னை மாநகரம் சிங்காரமாக இருக்க எத்தனை தூய்மைப் பணியாளர்களின் உயிரை இந்த ஸ்டாலின் அரசு பலிவாங்கியுள்ளதோ...?

தூய்மைப் பணியாளர்களை, குப்பையைப் போல கசக்கி எறிய கொஞ்சம் கூட இந்த ஆட்சியாளர்களின் மனசாட்சி உலுக்கவில்லையா? தூய்மைப் பணியாளர்களின் பணி பாதுகாப்பு, தொழிலாளர் உரிமைகளை இந்த திமுக அரசு ஒடுக்கி வருகிறது.உரிமைகளுக்காக போராடுபவர்களை அராஜகமாக ஒடுக்கி வருகிறது.

இது தான் ஸ்டாலின் மாடல் அரசின் சமூக நீதியா...?

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் தான் கொடுங்கோன்மை புரியும் இந்த மக்கள் விரோத அரசை வீழ்த்தும் மக்கள் படை.



அனு பாரதி

# என் மருத்துவக் கனவை நனவாக்கிய புரட்சித்தமிழர்!

## தேநீர் கடை ஊழியர் மகனின் உணர்ச்சிக் கடிதம்

**ஒரு கையெழுத்தால் ஒரு தலைமுறையின் எதிர்காலத்தையே மாற்றி அமைத்தார் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், புரட்சித்தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி.**

மருத்துவம் பயில நீட் தேர்வு கட்டாயம் என்ற விதியை திமுக அங்கம் வகித்த காங்கிரஸ் அரசு பிறப்பித்தது. இதனால் ஏழை எளிய கிராமத்து மாணவர்களின் மருத்துவக்கனவு பறிபோகுமோ என அச்சம் ஏற்பட்டது. சமூக நீதி கேள்விக்குறியாகிவிடுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்களின் நலனுக்காக என்ன செய்யலாம் என அப்போது முதலமைச்சராக இருந்த எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் யோசித்தார்.

எங்களுக்கு நீட் ஒழிப்பு ரகசியம் தெரியும், குறளி வித்தை தெரியும், முட்டை மந்திரம் தெரியும் என போலி திராவிடம் பேசி ஏமாற்றாமல் ஆக்கப்பூர்வமாக என்ன செய்யலாம் என உண்மைத் திராவிடத்தின் வழியே புரட்சித்தமிழர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் யோசித்தார்.

பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். புரட்சித்தலைவி ஜெயலலிதா ஆகியோர்களின் வழிவந்த கழக பொதுச்செயலாளர் புரட்சித்தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் சமூக நீதியை காக்கும் பொருட்டு, உண்மையான திராவிட கருத்தியலின் அடிப்படையில் சட்டப்பேரவையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்.

அரசுப்பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு மருத்துவக் கல்வியில் 7.5 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் வகையில் சட்டம் இயற்றினார்.

இந்த சட்டத்தால் ஏழை மாணவர்களின் மருத்துவக் கனவில் ஒளியேற்றி வைத்தார்.

தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில், மாநில அரசின் ஒதுக்கீடாக 4,043 இடங்கள் உள்ளன. 7.5% சதவீதம் ஒதுக்கீடு வழங்கப்பட்டால் ஒரு கல்வியாண்டில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சுமார் 300 இடங்கள் மருத்துவப்படிப்பில் இடம் கிடைக்கும் என்பதே இத்திட்டத்தின் சாரம்சமாக இருந்தது.



**7.5% சதவீத உள் இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவப்படிப்பில் சேர்ந்த அரசு பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை**

- *2020-21ல் 435 பேரும்,*
- *2021-22ல் 555 பேரும்*
- *2022-23ல் 584 பேரும்*
- *2023-24ல் 622 பேரும்*
- *2024-25ல் 620 பேரும்*

மருத்துவ படிப்பில் சேர்ந்துள்ளனர்.




**அதன்படி 2024ம் ஆண்டு 496 எம்.பி.பி.எஸ். 126 பி.டி.எஸ். இடங்கள் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கிடைத்துள்ளன. 2024-25ல் 620க்கும் மேற்பட்ட மாணவர்களும் மருத்துவ படிப்பில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.**

**அப்படி எடப்பாடியார் கொண்டு வந்த 7.5 சதவிகித இடஒதுக்கீட்டால் பயன்பெறும் ஓர் எளிய மாணவரின் கடிதம் தான் இது,**

**சென்னை மருத்துவக்கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் மாணவரின் கடிதத்தை இங்கு பார்க்கலாம்.**

**வணக்கம், எம் பேரு ஜீவித் குமார்.** நான் தேனி மாவட்டம், தே.வாடிப்பட்டி கிராமத்தை சேர்ந்தவன். அப்பா நாராயணமூர்த்தி, டீக்கடையில் கூலி வேலை பாத்துட்டு இருக்காங்க. அம்மா பரமேஸ்வரி ஹவுஸ் வைப். நான் பிளஸ் 2 வரைக்கும் அரசு பள்ளியில் தான் படிச்சேன்.

நான் பிளஸ் 2வுல, 600க்கு, 548 மார்க் வாங்கி இருந்தேன். 2019ல நீட் தேர்வு எழுதி 548 மார்க் வாங்கி இருந்தேன். ஆனாலும் எனக்கு டாக்டர் சீட் கிடைக்கல. தொடர்ந்து தனியார் கோச்சிங் மையத்தில படிச்சு, 2020ல், 664 மார்க் வாங்குனேன்.

அந்த வருஷம் முதல்வரா இருந்த எடப்பாடி பழனிசாமி அவர்கள் தலைமையிலான அதிமுக அரசு 7.5% சதவீத உள் இடஒதுக்கீட்டை கொண்டு வந்தாங்க. அந்த ஓர் அறிவிப்புதான் எங்க வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை கொடுத்துச்சு. 7.5% சதவீத உள் இடஒதுக்கீடு தரவரிசை பட்டியலில் முதல் ஆளா நான் தேர்வு ஆனேன்.

சென்னை மருத்துவ கல்லூரியில காலடி எடுத்து வச்சேன். அப்போ நான் எவ்ளோ சந்தோசமா இருந்தேன்னு சொல்ல எனக்கு வார்த்தையே இல்ல. ஏன்னா என்னோட மருத்துவக்கனவு நெனவாச்சு. என்னோட படிப்புக்கான எல்லா செலவையும், அரசு செய்து வருது. இப்போ நான் ஒரு பயிற்சி மருத்துவர். இது எல்லாத்துக்கும், முக்கியமான காரணம், முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அய்யா அவர்கள்தான். அவங்களுக்கு என்னோட நன்றியை தெரிவிச்சுக்கிறேன். நான் மட்டும் இல்ல, என்ன மாதிரி பல அரசுப் பள்ளி மாணவர்களோட மருத்துவ கனவு நிறைவேற எடப்பாடி பழனிசாமி அய்யா அவர்களும், அதிமுக அரசும் தான் காரணம்.



என்ன மாதிரியே, இன்னும் நிறைய மாணவர்கள் இந்த 7.5% இட ஒதுக்கீடு மூலமா, மருத்துவர் ஆகணும் என்பதுதான் என்னோட ஆசை. இந்த வருசம் மட்டும், 632 பேரு இந்த இட ஒதுக்கீடு மூலமா மருத்துவர் ஆகி இருக்காங்கன்னு நினைக்கும்போது ரொம்ப சந்தோசமா இருக்கு.

தனியார் பயிற்சி மையத்தை போல, அரசு பள்ளி மாணவர்களுக்கும் பயிற்சி வழங்க, அரசு முன்வர வேண்டும் என்பது என்னோட விருப்பம். அப்படி மட்டும் பயிற்சி கொடுத்தாங்கன்னா, பொது ஒதுக்கீட்டிலேயே அரசு பள்ளி மாணவர்களால் போட்டிப் போட முடியும். இதுவே அரசுக்கு நான் விடுக்கும் வேண்டுகோள்.

அதிமுக ஆட்சிக்கு வந்தா, எங்கள மாதிரி சாமானிய மக்களின் தலைமுறை மாறும் என்பதற்கு என்னோட வாழ்க்கைதான், சரியான உதாரணம்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி கே பழனிசாமி அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்பது என்னோட விருப்பம்.

இது ஏதோ ஒரு மாணவரின் விருப்பம் மட்டுமல்ல. தமிழக மக்களின் ஒட்டுமொத்த விருப்பமும் இதுவே.

மருத்துவக் கல்லூரிகளில் உள்கட்டமைப்பை இந்த திமுக அரசு மேம்படுத்த தவறியதால் கூடுதலாக கிடைக்கவேண்டிய 500 மருத்துவ இடங்களை தமிழ்நாடு இழந்துள்ளது. இதெல்லாம் இந்த அரசின் நிர்வாக திறமையின்மையால் தமிழ் நாடு இழந்துள்ள உரிமைகள். நம் தமிழக மாணவர்களின் கல்வி உரிமையை காக்கவும், மக்களைக் காக்கவும் மாநில உரிமைகளை மீட்கவும் மீண்டும் அதிமுக ஆட்சி மலர வேண்டும் என்பது மக்களின் விருப்பமாக உள்ளது.








# திராவிட டூன்

## தன் வினை..




### குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள்

*இடமிருந்து வலம்:* *1.) காதல்ஜோதி 2.) திராவிடம் 3.) சாரல் 4.) சிவப்பு 5.) ஆரியமாயை 6.) புத்தர் 7.) பரிமள(ம்) 8.) ரத்தத்தின் ரத்தம் 9.) கோட்டம், 10.) விடுதலை 15.) ராணி*

*மேலிருந்து கீழ்:* *1.) காஞ்சிபுரம் 7.) பரங்கிமலை 11.) பட்டர்*


*வலமிருந்து இடம்:* *12.) வெங்காயம் 13.) கிழக்கு, 14.) நாவலர்*

*கீழிருந்து மேல்:* *3.) சாதி 14.) நம்நாடு 17.) கண்ணியம்*



திராவிட காமிக்ஸ்- 2

## உதயநிதியின் நீட்டாகு நீட் ரகசியம்




தொடரும்...



# கேள்விகளும் திராவிட பதில்களும்

**1)அண்ணா வழி திராவிட இதழின் நோக்கம் என்ன?**

R. இதயக்கனி, சேலம்

இன்றைய அரசியல் சூழலில் திமுக அரசு, போலி திராவிடத்தை பின்பற்றி கமிஷன், கலெக்ஷன், கரப்ஷன் செய்து வருகிறது. உண்மையான திராவிடத்தை அறிஞர் அண்ணாவின் வழியில் மக்களுக்கு எடுத்துக் கூறுவதே அண்ணா வழி திராவிடத்தின் நோக்கம்.

**2)திராவிடம் என்றால் என்ன? தற்போதைய திமுகவின் நிலை திராவிடத்தின் மீது எவ்வாறு உள்ளது?**

M. மாணிக்கம், திண்டுக்கல்.

அனைவருக்கும் அனைத்தும் கிடைப்பது தான் திராவிடத்தின் அடிப்படை நோக்கம். ஆனால் தீய சக்தி திமுக வழிவழியாக தன் குடும்பத்திற்கே அனைத்தும் என்று முற்றிலும் திராவிட கோட்பாட்டிற்கு எதிராக உள்ளது. இதனை வெளிச்சம் போட்டு காட்டுவதற்காகவே அண்ணா வழி திராவிடம் தொடங்கப்பட்டது.

**3)தமிழக அரசியல் வரலாற்றில் சமூக நீதியை நிலைநாட்டிய கட்சி எது?**

S. அபிநயா, கோயம்புத்தூர்.

தமிழக அரசியல் வரலாற்றில் சமூக நீதியை வெறும் வார்த்தையில் மட்டும் இல்லாமல், தன்னுடைய குருதியில் கொள்கையாக மக்களுக்கு சேவையாற்றி வருவது அதிமுக மட்டுமே.

**4) உதயநிதி ஸ்டாலினின் நீட் விலக்கு ரகசியம் என்ன?**

K. சீனிவாசன், சென்னை

உதயநிதி ஸ்டாலின் நீட் விலக்கு ரகசியம் என்பது மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வருவதே ஆகும்.

**5)அண்ணா வழி திராவிடம் என்றால் என்ன?**

G. கரண் ராஜ், மதுரை.

அண்ணா வழி திராவிடம் என்பதற்கு எடுத்துக்காட்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித்தலைவி அம்மா, புரட்சித்தமிழர் எடப்பாடியாரின் மக்கள் நலத்திட்டங்களே ஆகும்.

**6) திமுக அரசு ஏன் "போலி திராவிட அரசு" என்று சொல்லப்படுகிறது?**

P. செல்வராஜ், தேனி

திமுக அரசு திராவிடத்தை பெயருக்காக மட்டுமே பயன்படுத்துகிறது. ஆனால் அதன் செயல்கள் அனைத்தும் குடும்ப ஆட்சியை வலுப்படுத்தும் வகையில் உள்ளது. இது உண்மையான திராவிடத்தின் எதிர்மறை வடிவம்.

**7) அண்ணா வழி திராவிடம் மக்கள் மத்தியில் என்ன செய்தியை பரப்ப நினைக்கிறது?**

N. சுரேஷ், ஈரோடு

அண்ணா வழி திராவிடம், திராவிடத்தின் உண்மையான அர்த்தம் "மக்கள்தான் முதன்மை, குடும்பம் இல்லை" என்பதைக் கொண்டு, விழிப்புணர்வு உருவாக்க நினைக்கிறது.

**8) திமுக ஆட்சியில் இளைஞர்கள் எதிர்கொள்ளும் மிகப் பெரிய பிரச்சனை என்ன?**

K. புனிதா, நீலகிரி.

வேலைவாய்ப்பு இல்லை, ஊழல் மிகுந்த ஆட்சி, திறமைக்கு மதிப்பு இல்லாமை — இதுவே திமுக ஆட்சியின் இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள்.

**9) உண்மையான சமூக நீதி என்றால் என்ன?**

S. பிரியங்கா, மேட்டுப்பாளையம்.

மதம், சாதி, பாராது ஒவ்வொருவருக்கும் சம வாய்ப்பு வழங்குவது தான் சமூக நீதி. இதை நடைமுறைப்படுத்தியது அதிமுக அரசு மட்டுமே.

**10) திமுக அரசு 'குடும்ப ஆட்சி' என்று சொல்லப்படுவதற்கான காரணம் என்ன?**

T. நிர்மல், செங்கல்பட்டு.

அரசின் ஒவ்வொரு முக்கியப் பொறுப்பும் குடும்ப உறுப்பினர்களிடமே இருக்கிறது. இதனால் மக்களின் நம்பிக்கை இல்லாமல், "மக்கள் அரசு" "குடும்ப நிறுவனம்" ஆகி விட்டது.

**11) அண்ணா வழி திராவிடம் இதழ் இளைஞர்களை எவ்வாறு ஈர்க்கிறது?**

J. பிரசாந்த், தாம்பரம்

இளைஞர்களுக்கான உண்மையான அரசியல் விழிப்புணர்வு, சாதனைகளின் உண்மை வரலாறு எதிர்கால நம்பிக்கை, இதனை திராவிட கருத்தியல் சார்ந்து வழங்குகிறது.

**12) அதிமுக ஆட்சியில் நடந்த முக்கியமான மக்கள் நலத்திட்டம் எது?**

V. நாகப்பன், ஓமலூர்

"அம்மா உணவகம்", இது உண்மையான திராவிடத்தின் உயிர் வடிவம். பணம் இல்லாதவரும், பெருமையுடன் சாப்பிடும் உரிமையை பெற்றனர்.

**13) எடப்பாடி பழனிசாமி அவர்களின் ஆட்சி ஏன் "மக்களுக்கான அரசு" என அழைக்கப்படுகிறது?**

H. வீராசாமி, வீராணம்

ஊழல் இல்லாத ஆட்சி, வேளாண்மை முதல் தொழிற்துறை வரை மக்களின் நலனை முன்னிறுத்திய திட்டங்கள், இதுவே உண்மையான மக்கள் ஆட்சி என்பதற்கான சான்று.

**நீங்கள் கேட்க விரும்பும் கேள்விகளை**

annavazhidravidam@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.



**அண்ணா வழி திராவிடம் இதழில் உங்களின் கட்டுரைகள் இடம்பெற வேண்டுமா?**

நீங்கள் விரும்பும் தலைப்பில் 400 வார்த்தைகளுக்கு மிகாமல் திராவிடக் கருத்தியல் சார்ந்து உங்களின் கட்டுரைகளை கீழ்கண்ட annavazhidravidam@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் அண்ணா வழி திராவிடம் இதழில் பிரசுரிக்கப்படும். சிறந்த கட்டுரையாக ஆசிரியர் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு கட்டுரைக்கு பரிசு வழங்கப்படும்.

www.annavazhidravidam.com